# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 45 ○ 29.09.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்




# இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட குழந்தைகள் எங்கே?

ஒக்டோபர் 1ம் திகதி சர்வதேச சிறுவர் தினத்தில் தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் போராட்டம்

## காணாமலாக்கப்பட்ட சிறுவர்களுக்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்

ஜெனீவாவிலிருந்து முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் இணைப்பாளர் மரியசுரேஷ் ஈஸ்வரி அழைப்பு






## இலங்கை நீதித்துறையின் மீது முழுமையான நம்பிக்கை இழக்கும் ஆபத்து

சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் இலக்கு மின்னிதழுக்கு சிறப்புப் பேட்டி

## ஐ.நாவின் தடைக்கு சனாதிபதியே காரணம்



சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட அமைப்பு

## போராடி வென்ற சஜித் பிரேமதாஸ மைத்திரியின் ஆதரவு யாருக்கு?

பூமிகன்





## தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அரசாங்கத்திற்கு விலை போய்விட்டனர்

காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் குற்றச்சாட்டு

# இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட குழந்தைகள் எங்கே?

## சர்வதேச சிறுவர் தினத்தில் தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் போராட்டம்

மனித உரிமைகளையும், மனிதாபிமானச் சட்டங்களையும் மீறி விடுதலை கோரிய தமிழ் இனத்தின்மீது இலங்கை அரசு திட்டமிட்டு இனவழிப்பைச் அரங்கேற்றியது.

இறுதி யுத்தத்தின்போது சிறீலங்கா அரச படைகளிடம் வட்டுவாகல் மற்றும் ஓமந்தைப் பகுதிகளில் வைத்து சரணடைந்த ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் இவர்களுள் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுவர்களும் அடங்குவார்கள். கையளிக்கப்பட்ட குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்ற கோரிக்கையை முன்வைத்து சர்வதேச சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதி தமிழர் தாயகமெங்கும் பாரிய கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்குக் கிழக்கு




வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தினரின் தெரிவித்துள்ளனர். இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்... இந்தப் போராட்டம் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. விசேடமாக ஐம்பதிற்கும் மேற்பட்ட குழந்தைகள் கையளிக்கப்பட்ட முல்லைத்தீவில் வட்டுவாகல் பாலத்தில் கவனயீர்ப்பு பேரணி பாரிய அளவில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இந்தப் போராட்டத்தில் தாயகத்தில் உள்ள அனைத்து உறவுகளும், சிவில் அமைப்புக்கள், அரசியல் தரப்புக்கள், பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என சகல தரப்பினரும் அந்தந்த மாவட்டங்களில் இடம்பெறும் போராட்டத்தில் பங்கேற்று எமது கோரிக்கைக்கு வலுச்சேர்க்குமாறு வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தினர் உரிமையுடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த நாளில் புலம் பெயர் தேசத்திலும், தாயகத்தில் காணாமலாக்கப்பட்ட குழந்தைகளுக்கு நீதி வேண்டி பாரிய ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை புலம்பெயர் சமூகம் முன்னெடுத்துள்ளது.

# இலங்கைக்கு ஐ.நா அதிர்ச்சியளித்துள்ளது

## ஐ.நாவில் படையினரை இடைநிறுத்தியமை குறித்து தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை

"ஐ.நா படையின் நடவடிக்கைகளிலிருந்து இலங்கைப் படையினரை இடைநிறுத்துவதாக முடிவெடுத்திருப்பதன் மூலம் தெளிவான ஒரு எச்சரிக்கை இலங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது" எனத் தெரிவித்திருக்கும் தமிழ்த்தேசிய அரசியல் அவதானிப்பு மையம், "போர்க் குற்றங்களை மூடி மறைப்பதற்கு ஐ.நா ஒருபோதும் ஒத்துழைக்காது என்ற இந்தச் செய்தி இலங்கைக்கு அதிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய ஒன்று" எனவும் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

உண்மை மற்றும் நீதிக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா, பி..பி.சியின் முன்னாள் செய்தியாளரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான பிரான்ஸிஸ் ஹரிசன் ஆகியோரின் திட்டமிட்ட, நேர்த்தியான முயற்சிகளாலேயே இவ்வாறான ஒரு நகர்வை ஐ.நா மேற்கொண்டுள்ளது



என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள ஆய்வு மையம், தமிழ் அரசியல் தலைவர்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் இது ஒரு முன்னுதாரணமாக உள்ளது எனவும் குறிப்பிட்டிருக்கின்றது. இது தொடர்பில் அவதானிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது: "இலங்கைப் படையினரை ஐ.நாவின் அமைதிகாக்கும் படையணியின் நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தியதன் மூலம் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிப்பதற்கு எதிராக ஐ.நா உறுதியான நிலைப்பாட்டை எடுக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள சவேந்திர சில்வா போர்க் குற்றஞ்களில் ஈடுபட்டுள்ளார் என்பதற்கு நம்பகத்தன்மையான ஆதாரங்கள் ஐ.நா விடம் உள்ளது. யுத்தத்தின் இறுதியில் சவேந்திர சில்வா தலைமை வகித்த படையணி கைது செய்யப்பட்டவர்கள் , சரணடைந்தவர்களை சுட்டுக்கொன்றதுடன் அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டது என

தொடர்ச்சி 7ம் பக்கம்....

# ஐ.நாவின் தடைக்கு சனாதிபதியே காரணம்

## சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட அமைப்பு

யுத்த குற்றச்சாட்டுகளிற்கு உள்ளாகியுள்ள சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமிப்பதன் மூலம் தேர்தலில் தனக்கு ஆதரவை அதிகரிப்பதற்கு இலங்கை சனாதிபதி மேற்கொண்ட முயற்சிகளே இலங்கை படையினரை ஐ.நா அமைதிகாக்கும் படையிலிருந்து தடை செய்யப்படும் நிலைக்கு காரணம் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள் முடிவடைந்துள்ள போதிலும் நிலைமாறுகால நீதி நடவடிக்கைகளிற்கு தன்னை அர்ப்பணித்துள்ள போதிலும் இலங்கை வெட்கமின்றி சவேந்திர சில்வாவை இன்னமும் யுத்தவீரர் என அழைக்கின்றது என்றும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இலங்கை படையினர் அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஐ.நா தடை செய்துள்ள அறிவிப்பு இலங்கைக்கு துயரமானதாக அமைந்துள்ளது. ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில் இலங்கைப் படையினர், ஈடுபடுத்தப்படுவது தடை செய்யப்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் யுத்த குற்றச்சாட்டுகளிற்கு உள்ளாகியுள்ள சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதித் தருணங்களில் 2008, 2009களில் சவேந்திர சில்வா இலங்கை இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவிற்கு தலைமை தாங்கினார். அவரது படையினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான திட்டமிடப்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டனர் என தெரிவிப்பதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளன. பொதுமக்களிற்கு ஏற்பட்ட உயிரிழப்புகளும், காயங்களும் பேரழிவு என வர்ணிக்கக் கூடியவையாக உள்ளன.

இதன் காரணமாக யுத்தத்தின் பின்னர் படையணிகளில் இணைந்த இளம் வீரர்கள் ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளனர். சவேந்திர சில்வாவின் நியமனம் இலங்கையின் சோகமான, துயரமான நடவடிக்கை என தெரிவித்துள்ள ஜஸ்மின் சூக்கா, இலங்கை கடந்த கால குற்றங்களிற்கு நேர்மையான குற்றவியல் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெறுவதையே விரும்புகின்றோம் என தெரிவித்துள்ளார். பல வருடங்களாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்,



இலங்கையின் பாதுகாப்பு மற்றும் அரச அதிகாரிகள் குறித்து துல்லியமாக விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளது. இலங்கையின் இறுதி யுத்தத்தில் ஒவ்வொரு படைப்பிரிவும் செயற்பட்ட இடம் குறித்து துல்லியமான தகவல்களை பதிவு செய்துள்ளது.

மோதலின் போது உயிர் தப்பிய, நேரில்கண்ட சாட்சியங்களான நூற்றுக் கணக்கானவர்களிடமிருந்து பெறப்பட்ட விரிவான தகவல்களை அடிப்படையாக கொண்டதாக இந்த ஆராய்ச்சி அமைந்துள்ளது. யுத்தம் இடம்பெற்றவேளை இலங்கை இராணுவம் வெளியிட்ட நாளாந்த களநிலைமை குறித்த இணையப் பதிவுகளையும் நாங்கள் ஆராய்ந்துள்ளோம். எனினும் இலங்கை இராணுவம் தற்போது அதனை இணையத்திலிருந்து அகற்றியுள்ளது. சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டதாக நம்பகத்தன்மை மிக்க குற்றச்சாட்டுகள்

தொடர்ச்சி 11ம் பக்கம்....

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அரசாங்கத்திற்கு விலை போய்விட்டனர்

### காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் குற்றச்சாட்டு



தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சம்மந்தன் மற்றும் சுமந்திரன் ஆகிய இருவரும் தமிழர்களுக்கான பிரதிநிதிகள் இல்லை. அவர்கள் சிங்களவர்களுக்கான பிரதிநிதிகளே என காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களின் பொதுப் பிரச்சினைகள், போராட்டங்கள் எதிலும் கலந்து கொள்வதில்லை. குறிப்பாக நீராவியடி பிள்ளையார் கோவில் விவகாரம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் போராட்டங்களில் திறமைவாய்ந்த சட்டத்தரணியாக இருக்கும் சுமந்திரனாலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினாலும் ஏன் குறித்த விடயம் தொடர்பில் தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை என ஊடகவியலாளர்களால் கேள்வி கேட்டபோது.

இதற்கு பதில் வழங்கிய ராஜ்குமார்… ஒருநாடு என் கோட்பாடு மற்றும் வடக்குக் கிழக்கை ஏற்றுக்கொண்டவர்கள் இவர்கள், தமிழர்களுக்கான பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு தரமாட்டார்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் விலைபோய்விட்டார்கள். தமது பதவிகளும், சுகபோகங்களுமே இவர்களுடைய குறிக்கோள் எனவும், நீராவியடி சம்பவத்தில் சட்டத்தரணிகள் குரல் கொடுத்திருந்தார்கள் ஆனால் தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட சம்பந்தன் இதுவரைக்கும் வாய்திறந்து கதைக்கவில்லை. 300 கோடிரூபா வீட்டை வாங்கியவரால் வாய்திறந்து கதைக்கமுடியாது. இதேபோல சுமந்திரனும் அதற்கு அடிமை எனவும் பல குற்றச்சாட்டுக்களை தெரிவித்தார்.

## ரணில், சம்பந்தன் நாளை சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் தான் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்கவுள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார். எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் இறுதித் தீர்மானத்தினை எடுத்திருக்காத நிலையில் இச்சந்திப்பு இடம் பெறுகின்றது.

முன்னதாக சஜித் பிரேமதாஸ சனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கு தயாரென்று தானாக முன்வந்து அறிவித்திருந்த வேளையில் அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும், சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பிலும், அதன் பின்னர் யாழில் கூட்டமைப்பிற்கும், சஜித்திற்கும் இடையில் சந்திப்புக்கள் நடைபெற்றிருந்த நிலையில் கூட்டமைப்பு எந்தவிதமான உறுதிப்பாடுகளையும் அளித்திருக்கவில்லை.

இதேவேளை, சஜித் பிரேமதாஸ கூட்டமைப்பின் ஆதரவு தனக்கே கிடைக்கும் எனவும், தான் எந்தவிதமான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படப்போவதில்லை என்றும் அறிவித்துள்ளார். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான, சிவமோகன், சாபிள்ஸ், சிறிதரன், செல்வம், கோடீஸ்வரன், ஸ்ரீநேசன் உள்ளிட்டவர்கள் உத்தியோகப் பற்றற்ற முறையில் சஜித் ஆதரவு அணியிடம் தாங்கள் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாருக்கு வாக்களிப்பது?

ஐ.தே.கயின் சனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். முதல்முறையாக சனாதிபதித் தேர்தல் களத்தில் இறங்கும் சஜித், தேசியப் பிரச்சினை குறித்து தன்னுடைய அணுகுமுறை என்ன என்பதை இதுவரை வெளிப்படுத்தவில்லை. இவ்விடயத்தில் அவரிடம் உறுதியான ஒரு நிலைப்பாடு இருப்பதாகவும் தெரியவில்லை. ஐ.தே.கயின் பங்காளிக் கட்சிகளில் பெரும்பாலானவை அவருக்கு ஆதரவளிக்கின்றன. ஜயம்பதி விக்கிரமநாயக்க தலைமையிலான ஐக்கிய இடதுசாரி முன்னணி மட்டும் சஜித்தின் நியமனத்தை நிராகரித்து, ஐ.தே.க கூட்டணியிலிருந்து விலகுகின்றது. ஐ.தே.க அரசினால் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்புத் திட்டத்தின் சிற்பிகளில் ஒருவராகக் கருதப்படுபவர்தான் ஜயம்பதி. அவர் வெளியேறியிருப்பதில் முக்கியமான செய்தி ஒன்றுள்ளது.

பொது ஜன பெரமுனவும், ஜே.வி.பியும் தங்களுடைய வேட்பாளர்கள் யார் என்பதை ஏற்கனவே அறிவித்திருந்தன. பொது ஜன பெரமுனவின் சார்பில் கோத்தபாய ராஜபக்சவும், ஜே.வி.பி சார்பில் அதன் தலைவர் அனுரகுமார திஸநாயக்க களமிறங்குகின்றார்கள். இவர்களைவிட சிறிய கட்சிகளின் சார்பிலும், சுயேச்சையாகவும் சிலர் களமிறங்கலாம். ஆனால், சஜித், கோத்தா இடையில்தான் நேரடிப் போட்டி இருக்கப்போகின்றது. தேர்தல் களம் இந்த முறை கடும் போட்டியானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜே.வி.பி பெறக்கூடிய வாக்குகள் பிரதான வேட்பாளர்கள் 50 வீதம் வாக்குகளை பெறுவதற்கு முட்டுக்கட்டையாக அமையலாம். அதனால் சிறுபான்மை மக்களுடைய வாக்குகள் பிரதான வேட்பாளர்களின் வெற்றிக்கு அவசியம். அதனை இலக்கு வைத்து அவர்கள் தங்களுடைய பிரச்சார உத்திகளை வகுத்துக் கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது.

சிறுபான்மையினக் கட்சிகளில் பிரதான முஸ்லீம் கட்சிகள் இரண்டும் சஜித்துக்கு ஆதரவளிக்கின்றன. மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியும் அதே நிலைப்பாட்டில் தான் உள்ளது. டக்ளஸ், பெருமாள், பிள்ளையான், கருணா போன்றவர் கோத்தாவை ஆதரிக்கப் போகின்றார்கள். தமிழர்களுடைய பிரச்சினைகளையிட்டு இந்த இருவருமே ஆக்கபூர்வமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. கோத்தா 13க்கு மேலாக அவர் செல்லத் தயாராகவில்லை. பொருளாதார அபிவிருத்திதான் எல்லாவற்றுக்குமான தீர்வு என அவர் நினைக்கிறார். சஜித்திடம் எந்தவித நிலைப்பாடும் இல்லை.

பிரதான தமிழ்க் கட்சிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவரட்டும் அதில் அவர்கள் சொல்லப்போவது என்ன என்பதை அறிவதற்காக அவர்கள் காத்திருக்கின்றார்கள். அதன்பின்னரே தமது நிலைப்பாட்டை அறிவிக்கப்போவதாக அவர்கள் சொன்னாலும், பேரங்களுக்கான பேச்சுக்கள் ஆரம்பமாகப் போகின்றன. தமிழர்களுடைய உணர்வுகள் எவ்வாறு உள்ளன என்பதைப் பொறுத்தே கூட்டமைப்பின் நிலைப்பாடு அமையும் என எதிர்பார்க்கலாம். கடந்த இரண்டு சனாதிபதி தேர்தல்களிலும் மகிந்தவைத் தோற்கடிக்க வேண்டும் என்று தமிழ் மக்களுடைய உணர்வுகள் காணப்பட்டதால் அதற்கு ஏற்ற தீர்மானத்தை கூட்டமைப்பும் எடுத்தது. இம்முறை அவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் நிலை இல்லை. கடந்த தேர்தலில் மைத்திரியை ஆதரிப்பது என கூட்டமைப்பு தீர்மானித்திருந்தது. மகிந்தவை தோற்கடிக்க வேண்டும் என்பது மட்டுமன்றி மைத்திரி — ரணில் தரப்பு கொடுத்திருந்த சில உறுதிமொழிகளும் இதற்குக் காரணம். உறுதிகள் வாய் மூலமாக கொடுக்கப்பட்டன. ஆனால், நிறைவேற்றப்படவில்லை. வாக்குறுதிகளை எழுத்தில் பெற்றுக்கொண்டே யாரை ஆதரிப்பது என்பதையிட்டு முடிவெடுக்க போவதாக கூட்டமைபு இப்போது தெரிவித்திருக்கின்றது. அனைத்து வேட்பாளர்களும் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தும் என்றும், தெளிவான நிலைப்பாட்டை கொண்டுள்ளவர்களுக்கு ஆதரவு என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை வரலாற்றில் வாக்குறுதிகள் மறப்பது என்பதற்கு அப்பால், எழுத்து மூலமாக செய்யப்பட்ட உடன்படிக்கைகள் கூட கிழித்தெறியப்பட்டிருக்கிறன. இதனால், எழுத்து மூலமான உடன்படிக்கைக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் அவசியம் எனவும் வலியுறுத்தப்படுகின்றது. ஆனால், இலங்கை—இந்திய உடன்படிக்கை கூட முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. 30 வருட போர் முடிவடைந்து 10 வருடங்கள் சென்றுவிட்டது. போருக்கான காரணங்கள் அப்படியேதான் உள்ளன. போரின் விளைவுகளாக உருவான பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படவில்லை. இவற்றுக்கான தீர்வை வெளிப்படையாகவும், நேர்மையாகவும் முன்வைக்கக் கூடியவர்கள் அதனை எழுத்தில் வழங்க வேண்டும். அவ்வாறானவர்களுக்கு வாக்களிப்பது குறித்து ஆரோக்கியமான விவாதம் அவசியம். அதன் மூலம் தமிழ்மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதையிட்டுத் தீர்மானிக்கலாம்!

# நான் ஒரு அப்பாவி என்று ஐ.நா பிரதிநிதியே கூறினார்

## கோத்தபாய புலம்பல்

ராஜபக்ச குடும்பத்திலேயே, தானே மிகவும் அப்பாவியான நபர் என சிறீலங்கா



பொதுஜன முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கரும் இதனை தெரிவித்திருந்தார் என கோத்தபாய தெரிவித்துள்ளார். தாம் கொடூரமான மனிதர் என சிலர் குற்றம் சுமத்திய போதிலும் தமது குடும்பத்திலேயே தாமே மிகவும் அப்பாவியான நபர் என மக்கள் சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற போது குறிப்பிட்டதாக சிங்கள இணையதளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. தாம் எவ்வளவு அப்பாவி என்பதனை தமது சகோதரர்களிடம் கேட்டறிந்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கருடன் அரை மணித்தியாலப் பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனவும், இந்த சந்திப்பு சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நீடித்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார். உங்களை கொடூரமான நபர் என சிலர் கூறிய போது நீங்கள் அவ்வாறு இல்லை என்பது புரிகின்றது என ஹானா சிங்கர் கூறிச் சென்றார் எனவும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா, சிறீலங்கா இராணுவ தளபதிக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது!

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் கருத்து

சிறீலங்கா படையினரை ஐநாவின் அமைதிகாக்கும் படையணியின் நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தியதன் மூலம் ஐநா யுத்தகுற்றங்களை மூடி மறைப்பதற்கான முயற்சிகளை அலட்சியம் செய்யப்போவதில்லை என்ற செய்தியை தெரிவித்துள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஐநாவிற்கான இயக்குநர் லூயில் சர்பொனேயு இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

சிறீலங்கா படையினரை ஐ.நாவின் அமைதி காக்கும் படையணியின் நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தியதன் மூலம் யுத்தகுற்றங்களில் ஈடுபட்டவர்களை தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிப்பதற்கு எதிராக ஐ.நா உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. சிறீலங்காவின் இராணுவதளபதியாக நியமிக்கப்பட்டுள்ள சவேந்திர சில்வா நம்பகத்தன்மை மிக்க குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதே இதற்கு காரணம். இலங்கையின் 26 வருட ஈவிரக்கமற்ற யுத்தத்தின் இறுதியில் சவேந்திர சில்வா தலைமை வகித்த படையணியொன்று கைது செய்யப்பட்டவர்களை சுட்டுக்கொன்றதுடன் அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டது என ஐ.நாவின் விசாரணைக் குழுவொன்று 2015இல் கண்டுபிடித்திருந்தது.

யுத்த குற்றங்கள் குறித்து விசாரணை செய்து நீதிவிசாரணைகளை முன்னெடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும் அது இன்னமும் இடம்பெறவில்லை. 2012 இல் ஐக்கியநாடுகளிற்கான பிரதிதூதுவராக பணியாற்றிய வேளை சவேந்திர சில்வா அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் காரணமாக அமைதிப்படை நடவடிக்கைகள் குறித்த ஐ.நாவின் விசேட குழுவிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

1980களில் இலங்கையின் தென்பகுதியில் ஜே.வி.பியினருக்கு எதிரான நடவடிக்கைகளின் போதும் சவேந்திரசில்வா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. சிறீலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான யுத்தத்தின் இறுதி தருணங்களில் 40000ற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கொடூரம் காரணமாக ஐ.நாவின் நடவடிக்கைகளில் மனித உரிமைக்கு முக்கியம் என்ற கொள்கையை ஐ.நா பின்பற்ற தொடங்கியது. இந்த நடவடிக்கைகள் கடந்த சில வருடங்களில் அலட்சியப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இது அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினருக்கும் நாடுகளிற்கும்



பொருந்தக்கூடியதாக உள்ளது. இலங்கை தொடர்பான ஐ.நாவின் கொள்கையை அடிப்படையாக கொண்ட நிலைப்பாடு ஐ.நாவின் புதிய அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது என எதிர்பார்ப்போம். அமைதிப்படை நடவடிக்கைகளில் தங்கள் படையினரை ஈடுபடுத்தும் நாடுகளிற்கு தங்கள் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா? என விசாரணை செய்து ஆராயும் கடப்பாடு உள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் லெபனானில் பணிபுரிய அனுப்பபட்ட சிறீலங்கா படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா? என்பது குறித்து ஆராயப்படவில்லை என்பது தெரியவந்தது. 2017 இல் ஹெய்ட்டியில் அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிறீலங்கா படையினர் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களிற்காக திருப்பி அனுப்பர்பட்டனர். விசாரணைகளை மேற்கொள்வதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ள போதிலும் இன்னமும் அது இடம்பெறவில்லை.

சவேந்திரசில்வாவின் நியமனம் இலங்கை இராணுவம் பாரிய துஸ்பிரயோகங்களை இழைத்தவர்களிற்கு தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படவேண்டும் என்ற கொள்கையை ஸ்தாபனமயப்படுத்தியுள்ள ஒன்று என்பதை அம்பலப்படுத்தியுள்ளது. ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ கட்டரசினதும் ஐக்கியநாடுகளின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளிற்கான ஸ்தாபனத்தினதும் நடவடிக்கை யுத்த குற்றங்களை மூடி மறைப்பதற்கான முயற்சிகளை ஐ.நா அலட்சியம் செய்யாது என்ற செய்தியை தெரிவித்துள்ளது.

# பௌத்த துறவியின் தகனம் இலங்கை ஒரு தோல்வியுற்ற நாடு என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நீராவியாடி இந்து கோவில் வளாகத்தில் அமைந்துள்ள இடத்தில் பௌத்த துறவி கொலோம்பா மாதலங்கர தேரரின் தகனம் தமிழர்களின் புனித வழிபாட்டுத் தலத்தை இழிவுபடுத்தும் செயலாகும். இந்த இடத்தில் தேரரைத் தகனம் செய்யக்கூடாது எனத் தடைசெய்த நீதிமன்ற உத்தரவையும் மீறி பௌத்த தேரரின் உடலம் ஆலயத்தின் தீர்த்தக்கேணி அருகில் தகனம் செய்யப்பட்டுள்ளது. இது உலக மனித உரிமைகள் சாற்றுரையின் 9 வது பிரிவான “நீதியான வழக்குக்கான உரிமை” என்ற உறுப்புரையை மீறும் செயலாக் கருதப்படவேண்டும்.

இந்த பௌத்த வன்முறைக் கும்பலுக்கு பொது பலசேனாவின் செயலாளர் ஞானசர தேரர் தலைமை தாங்கியுள்ளார். சம்பவத்தின்போது இந்து சமய பக்தர்களையும், அவர்களின் வழக்கறிஞர்களையும் பௌத்த துறவிகள் மிரட்டியும், தாக்கியும் உள்ளனர். இப்படியான நிகழ்வுகள் ‘இலங்கையில் சட்டத்திற்கும் மேலாகப் பௌத்த மதத்திற்கு முதலிடம் உள்ளது’ என்பதை மட்டுமே நிரூபிக்கின்றது. நீதிமன்ற உத்தரவையும் மீறி தகனம் செய்ய, வன்முறையில் ஈடுபட்ட பௌத்த பிக்குகளுக்கு அங்கு நின்ற காவல்துறையும், இராணுவமும் பக்கபலமாக நின்று உதவியுள்ளனர். இது உலக மனித உரிமைகள் சாற்றுரையின் 7 வது பிரிவான “சட்டத்தின் முன் சமவுரிமை” என்ற உறுப்புரையை மீறும் செயலாகும்.

இப்படியான நிகழ்வுகள் சிறீலங்கா, சட்டம் மற்றும் ஒழுங்குகள் இல்லாத ஒரு தோல்வியுற்ற நாடு என்பதையும், தமிழர்களுக்கு சிறீலங்காவின் சட்டத்தின் கீழ் சமமான பாதுகாப்பைப் பெற முடியாது என்பதையும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்றன. வன்மமும், வன்முறைச் செயற்பாடுகளும் கொண்ட சிங்கள பௌத்த துறவி ஞானசார தேரர் முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டியதற்காகவும், நீதிமன்ற அவமதிப்பிற்காகவும் சிறையில் அடைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. அவ்வாறாயினும், சனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் பணிப்பின் பெயரில் அவரக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டு அவரது இனவெறியாட்டங்களைத் தங்குதடையின்றி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடைபெறும் இந்த நிகழ்வுகள் சிறீலங்காவிற்குள் தமிழர்கள் நீதியை என்றுமே எதிர்பார்க்க முடியாது என்பதில் சந்தேகத்திற்கு இடமின்றி மீண்டும் நிரூபிக்கப்படுள்ளதுடன் கடந்த ஏழு தசாப்தங்களாக பலமுறை திரும்பத் திரும்ப நடைபெற்றுள்ளது என்பதும் நிரூபணமாகின்றது. இலங்கையில் நல்லிணக்கத்திற்கான தங்கள் முயற்சி பயனற்றது என்பதை ஐ.நா சபையின் உறுப்பு நாடுகள் உணர்ந்துகொள்வது மிகவும் அவசியம் ஆகும்.

சிறீலங்காவில் இனப்படுகொலை நடப்பதைத் தடுக்கவும், மீதமுள்ள தமிழ் மக்களை சிறீலங்காவின் ஆக்கிரமிப்புப் படைகள் மேலும் துஷ்பிரயோகம் செய்வதிலிருந்து பாதுகாக்கவும் தமிழர்கள் ஐ.நா சபையின் தலையீட்டை அவசரமாக நடைமுறைப்படுத்தக் கோருகின்றனர். அவ்வாறு செய்யத் தவறும்பட்சத்தில் இந்த பிராந்தியத்தை மேலும் சீர்குலைக்கும் அபாயம் உள்ளது.

# இலங்கை நீதித்துறையின் மீது முழுமையான நம்பிக்கை இழக்கும் ஆபத்து

## சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் சிறப்பு நேர்காணல்

நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டமைக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது விட்டால் விமர்சனங்களைக் கொண்டிருக்கும் இலங்கை நீதித் துறையின் மீதான முழுமையான நம்பிக்கையை மக்கள் இழப்பதற்கு வழியேற்படுத்தும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் எச்சரிக்கை விடுத்துள்ளார். இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவருடைய நேர்காணலின் முழுவடிவம் வருமாறு,

**கேள்வி:- செம்மலையில் உருவாக்கப்பட்ட சட்டவிரோத விகாரையின் விகாராதிபதியின் தகனம் குறித்து நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட முதற்கட்டளை பற்றி கூறுங்கள்?**

பதில்:— செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த விகாரையின் விகாராதிபதி கொலம்பே மேதாலங்காதர தேரரின் பூதவுடலை இறுதி மரியாதைகளுக்காக ஆலய வளாகத்தினுள் கொண்டுவரக்கூடாது என்றும், அவ்வாறு கொண்டு வரப்பட்டால் இனங்களுக்கிடையில் பதற்றம் ஏற்படும் ஆபத்துள்ளதாகவும், இந்துசமய பாரம்பரியங்கள் மீறப்படும் என்பதை சுட்டிக்காட்டியும் நீதிமன்றம் அந்நடவடிக்கைக்கு தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று ஆலய பரிபாலன சபை மற்றும் தமிழ் மக்கள் மரபுரிமை அமைப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுமுறை தினமாகியதால் பதில் நீதிவான் ஏ.எம்.சுதர்சனின் கவனத்திற்கு வழக்கு இலக்கம் ஏஆர் 745/2019 கொண்ட மனு கொண்டுவரப்பட்டது. அதன்போது, 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு மனுதாரர்களும், பிரதிவாதிகளும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்திற்கு ஆஜராக வேண்டும். நீதிமன்றம் கட்டளையொன்றை அறிவிக்கும் வரையில் கொலம்பே மேதாலங்காதர தேரரின் பூதவுடலை இப்பூமியில் புதைப்பதோ, எரிப்பதோ கூடாது.

கட்டளை அறிவிக்கும் வரையில் இருதரப்பினரும் இப்பூமியில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் செயற்படக்கூடாது. அத்துடன் கோயில் மற்றும் விகாரையின் வழிபாடுகளுக்கு தடைகளை ஏற்படுத்தாத வகையில் இருக்க வேண்டும். பொலிஸார் சமாதனக்குலைவு ஏற்படாத வகையில் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்பதுடன், இந்தக் கட்டளை இருதரப்பினருக்கும் கையளிக்கப்பட வேண்டும். அத்துடன் குறித்த வளாகத்தில் இந்த கட்டளை பகிரங்கமாக ஒட்டப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**கேள்வி:- பிரதேச சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டு காவல்துறை, மாவட்ட செயலாளர் உள்ளிட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆவணத்தில் என்ன விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது?**

பதில்:— மயானங்கள் மற்றும் இடுகாடு கட்டளைகள் சட்டத்திற்கு ஏற்பட கடந்த 22ஆம் திகதி, இடுகாடுகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் சபையின் அனுமதியின்றி எந்தவொரு பூதவுடலையும் புதைப்பதற்கோ அல்லது எரிப்பதற்கோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு சபையானது என்றும் இந்த விடயத்தில் காவல்துறையினர் அவதானம் கொண்டு தடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திய எழுத்துமூல ஆவணம் கரைத்துரைப்பற்று பிரேதச சபையால் முல்லைத்தீவு காவல்நிலைய பொறுப்பதிகாரி, மாவட்ட செயலாளர்,



கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர், செம்மலை கிழக்குகிராம அலுவலர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

**கேள்வி:- 23ஆம்திகதி திங்களன்று நீதிமன்றத்தில் இடம்பெற்ற மனு மீதான விசாரணைகளைப் பற்றியும், வழங்கப்பட்ட உத்தரவு பற்றியும் கூறுங்கள்?**

இந்நிலையில் 23ஆம் திகதி இந்த வழக்கு விசாரணை முல்லை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் மனுதாரர்கள் சார்பில் எனது தலைமையிலான சட்டத் தரணிகளும், பௌத்த தேரர்கள் சார்பில் சட்டத்தரணி தல்பாவில தலைமையிலான குழுவினரும், பிரதேசசபை சார்பில் சட்டத்தரணி இளங்குமரனும் ஆஜராகியிருந்தனர். இதன்போது பௌத்த தேரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், விகாராதிபதியின் உடலை விகாரைக்கு அண்மையிலேயே எரிப்பதற்கு




அனுமதி கோரி வாதிட்டார்கள். இந்து சமய முறைப்படி இறந்தவரின் உடலை ஆலயத்தினுள் கொண்டுவரமுடியாது. அதனை மீறும் வகையில் தேரரின் உடல் கொண்டு வரப்பட்டுள்ளது. அது தவறானதாகும். விகாரதிபதியின் உடலை பிறிதொரு இடத்தில் தகனம் செய்வதற்கு நீதிமன்றம் கட்டளையை பிறப்பிக்க வேண்டும் என்று எமது தரப்பில் எதிர்த்து வாதிடப்பட்டது.

அத்துடன் கரைத்துரைப்பற்று பிரதேச சபைக்கே இடுகாடுகள் மயானங்கள் கட்டளைகள் சட்டத்தின் பிரகாரம் பூதவுடலை தகனம் செய்வது குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் இருப்பதாகவும், நீதிமன்றம் இதில் உத்தரவிடமுடியாது என்றும் மன்றின் கவனத்திற்கு எடுத்துக் கூறப்பட்டது.

இந்த விடயம் இன, மத ரீதியான உணர்வு பூர்வமான விடயமாகையால் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் மூலமாக இணக்கம் காண்பதற்கு மன்று ஒத்திவைக்கப்பட்டு 15 நிமிடங்கள் வழங்கப்பட்டது. அதடினப்படையில் நீராவியடி பிள்ளையார் ஆலயத்திற்கு எதிரில் உள்ள இராணுவ முகாமிற்கு பின்னால் உள்ள கடற்கரை பகுதியில் தகனம் செய்வதற்கு பிரதிவாதிகள் தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அதன்போது, அவ்வாறு தகனம் செய்யப்படுகின்றபோது அந்த நிலத்தினை தேரர்கள் எதிர்காலத்தில் உரிமை கோருவதோடு, நினைவுச்சிலைகளை அமைப்பதற்கும் முயல்வார்கள். அம்முயற்சிகள் இனங்களுக்கிடையிலான முறுகல்களை ஏற்படுத்தும் என்று நாம் சுட்டிக்காட்டி எதிர்ப்பினை வெளியிட்டோம்.

இவற்றை கவனத்தில் கொண்ட மன்று, குறித்த கடற்கரைப்பகுதியில் உடலை தகனம் செய்ய முடியும் என்றும், அதன் பின்னர் அந்நிலத்திற்கு யாரும் உரிமை கோரமுடியாது என்றும் அதில் எவ்விதமான கட்டுமானங்களைச் செய்ய முடியாது என்றும் குறிப்பிட்டது. அத்துடன் கடற்கரையில் எப்பகுதியில் தகனம் செய்வது என்பதை இருதரப்பினர் மற்றும் ஆஜரான சட்டத்தரணிகள் தலா இருவர் பங்கேற்று பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இடத்தினை நேரடியாகச் சென்று அடையாளமிட வேண்டும் என்றும் மன்று கூறியது. அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட காவல்துறை தலைமை பொறுப்பதிகாரிக்கு இந்த விடயத்தினை நடைமுறைப்படுத்துமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

**கேள்வி:- இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் சட்டத்தரணிகளும், பொதுமக்களும் தாக்கப்படும் நிலைமை எவ்வாறு ஏற்பட்டது?**

பதில்:— மன்றின் உத்தரவின் பிரகாரம், சட்டத்தரணிகளான கனரத்தினம் சுகாஸ், கணேஸ்வரன், மணிவண்ணன் ஆகியோரும் ஆலய நிருவாகத்தினர் மற்றும் தமிழர் மரபுரிமை பேரவையின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் தகனம் செய்வதற்கான இடத்தினைக் காண்பிப்பதற்காகச் சென்றபோது நீராவியடிப் பிள்ளையார் ஆலய கேணிக்கு அருகில் பெருந்திரளான பெரும்பான்மை மக்கள் சூழ பௌத்த தேரர்கள் உயிரிழந்த விகாராதிபதியின் பூதஉடலை தகனம் செய்வதற்கான சிதையை தயார் செய்திருந்தனர்.

நீதிமன்ற உத்தரவை அவர்களிடத்தில் கூறச்சென்ற சட்டத்திரணிகளை தாக்கியதோடு, காவல்துறையினர் அப்பகுதிக்கு அருகில் செல்வதற்கு இடமளிக்காது தடுத்திருந்தார்கள். நீதிமன்ற கட்டளையை அங்கிருந்த பொறுப்பதிகாரிகளுக்கு கூறியபோதும் அவர்கள் கருத்திலெடுக்காது செயற்பட்டிருந்தார்கள்.

**கேள்வி:- தேரர்களுக்கு நீதிமன்ற உத்தரவு தாமதமாக கிடைத்ததாக கூறுகின்றார்களே?**

பதில்:— விகாராதிபதியின் உடலை தகனம் செய்வதற்கான நீதிமன்ற உத்தரவு

தொடர்ச்சி 11ம் பக்கம்....

# ஆமத்துறுவுக்கு முதலாம் இடம்



நிலாந்தன்

நீராவியடிப் பிள்ளையார் கோவில் விவகாரம் மறுபடியும் கொதிநிலையை அடைந்திருக்கிறது. கன்னியா வெந்நீரூற்றில் தமது மரபுரிமையைப் பாதுகாப்பதற்காகவும், நமது வழிபாட்டு உரிமையை உறுதிப்படுத்துவதற்காகவும் தன்னியல்பாக சுமார் இரண்டாயிரம் பொது மக்கள் திரண்டார்கள். குழந்தைகளும், பெண்களும், முதியவர்களுமாக அது தானாகத் திரண்ட கூட்டம். எனினும் அதற்காக சில கிழமைகளுக்கு முன்னரே ஒரு பகுதி செயற்பாட்டாளர்கள் தொடர்ச்சியாக உழைத்தார்கள். ஆனால் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் திரண்ட கூட்டம் பல நாட்கள் திட்டமிடப்பட்ட ஒன்று அல்ல. ஓரிரவுக்குள் கிளர்த்தெழுந்த சனத்திரள் அது. திங்கட்கிழமை நீதிமன்ற உத்தரவை மீறி பிக்குவின் உடல் எரியூட்டப்பபட்டதையடுத்து கொதிப்படைந்த தமிழ் மக்கள் தாமாகத் திரண்டு தமது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். தகன அரசியலுக்கு ஒரு பண்பாடுப் பரிமாணம் உண்டு. இது தமிழ்க் கூட்டு உளவியலைக் கொதிப்படையச் செய்துவிட்டது. ஆர்ப்பாட்டத்தில் காணப்பட்ட பலர் எப்பொழுதும் இதுபோன்ற ஆர்பாட்டங்களுக்கு தவறாமல் வருபவர்கள்தான். என்றாலும் எந்தவித முன்னேற்பாடுமின்றி அதுவும் சனத்தொகை அடர்த்தி மிகக் குறைந்த முல்லைத் தீவு மாவட்டத்தில் ஓரிரவுக்குள் இவ்வளவு தொகை திரண்டமை எதைக் காட்டுகிறது? “தமிழ்மக்கள் ஒன்று திரள ஞானசார தேரர்கள் தேவை” என்பதையா ?

நீராவியடிப் பிள்ளையார் கோவில் விவகாரம், என்பது கடந்த பல மாதங்களாக அரங்கில் ஊடகக் கவனிப்பைப் பெற்ற ஒன்றாகும். எனினும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம் காணிக்கான போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம் போன்றவற்றோடு ஒப்பிடுகையில் இது பிந்தியது. கன்னியா வெந்நீரூற்று விவகாரம் கூட ஒப்பீட்டளவில் இதற்கு முந்தியது. இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால் இப்படியே ஒவ்வொரு பிரச்சினையாக மேல் எழும் பொழுது தமிழ் மக்களின் கவனமும், செயற்பாட்டாளர்களின் கவனமும், அரசியல் வாதிகளின் கவனமும் குறிப்பிட்ட அந்தப் பிரச்சினையின் மீது குவிகிறது. அது கொஞ்ச காலம் கொதிக்கும். அதன்பின் புதிதாக ஒரு பிரச்சினை எழும். அல்லது ஏற்கனவே இருக்கிற ஒரு பிரச்சினை புதிய திருப்பத்தை அடையும். அது மறுபடியும் தமிழ் மக்களின் கொதிப்பைக் கூட்டும். ஊடகங்களில் தலைப்பு செய்தியாக மாறும். பின்னர் சிறிது காலத்தின் பின் அதன் கொதிப்புத் தணிந்து விடும். கடந்த பத்தாண்டுகளாக இப்படி பல விடயங்கள் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளன. தமிழ் பொது மக்களும் காலத்துக்கு காலம் வெவ்வேறு விவகாரங்களில் மீது தமது கவனத்தை குவிப்பதும் பின்னர் ஒரு கட்டத்தில் அதைக் கடந்து போவதுமாக காணப்படுகிறது. இதில் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. இதில் பெரும்பாலான போராட்டங்களில் தமிழ் மக்களுக்கு உரிய வெற்றி கிடைக்கவில்லை. தொகுத்துப் பார்த்தால் கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் மக்கள் காலத்துக்கு காலம் வெவ்வேறு விவகாரங்களை முன்வைத்து தொடர்ச்சியாக போராடி வருகிறார்கள். ஆனால் எந்த ஒரு விவகாரத்திலும் அவர்களுக்கு இறுதி வெற்றி கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் போராட்ட சக்தி இவ்வாறு தெட்டம் தெட்டமான போராட்டங்களில் சிதறடிக்கப்படுகிறது. மாறாக அதை ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பது யார்?

மிகக் கொடுமையான உண்மை இதுதான். தமிழ் மக்களின் போராட்ட சக்தியை, தமிழ் நீதியை, தமிழ் அறிவை, தமிழ் செயல் வீரத்தை, தமிழ்க் கலையை, தமிழ் ஆவணங்களை ஒருமுகப்படுத்தவும் ஒரு திரட்சிக்குள் கொண்டு வரவும் தமிழ் மக்கள் மத்தியில் பொருத்தமான ஒரு மக்கள் அமைப்பு கிடையாது. பேரவையை அப்படிப்பட்டதோர் அமைப்பாக புனரமைக்க வேண்டும் என்று கேட்கப்படுகிறது. அது தொடர்பில் இப்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது. நடந்து முடிந்த எழுக தமிழிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் பேரவை தன்னை புனரமைக்க வேண்டும். அல்லது ஒரு புதிய அமைப்பு தோன்ற வேண்டும்.

முதலில் தமிழ் எதிர்ப்பை ஒன்று திரட்ட வேண்டும். இல்லையென்றால் தெட்டம் தெட்டமாக சிதறி நின்று போராடி வெல்வது கடினம். ஏனெனில் நீராவியடி பிள்ளையார் கோவில் விவகாரம் எனப்படுவது உதிரியானது அல்ல. கன்னியா வெந்நீரூற்று விவகாரமும் உதிரியானது அல்ல. அரசியல் கைதிகளுக்கான போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் போராட்டம், காணிகளுக்கான போராட்டம் போன்றவையும் உதிரியானவை அல்ல. அவை ஒட்டுமொத்த வழி வரைபடம் ஒன்றின் கீழ் முன்னெடுக்கப்படும் ஒடுக்குமுறைக்கு எதிரான ஒருங்கிணைக்கப்படாத போராட்டங்களே.

இதிலுள்ள பயங்கரம் என்னவென்றால் ஒடுக்குமுறையானது நன்கு நிறுவனமயப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் அதற்கு எதிரான நடவடிக்கைகளோ ஒருங்கிணைக்கப்படாதவை. தெட்டம் தெட்டமானவை. இப்படியே தொடர்ந்தும் தெட்டம் தெட்டமாக எதிர்ப்பை காட்டினால் அது தமிழ் எதிர்ப்பை நீர்த்துப் போகச் செய்துவிடும். முடிவில் சலிப்படையச் செய்து விடும். கன்னியாவில் திரண்டதைப் போல முல்லைத்தீவிலும் மக்கள் தன்னியல்பாகத் திரள்கிறார்கள். அதாவது உணர்ச்சிகரமான விவகாரங்களின் மீது தன்னியல்பாகத் திரள்கிறார்கள். இத்திரட்சியை ஓர் அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற அமைப்புகள் இல்லை. இந்த வெற்றிடமே சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்திற்கு துணிச்சலையும், ஊக்கத்தையும் கொடுக்கிறது. உதாரணமாக கன்னியா விவகாரத்தில் அந்தப் பிரச்சினையை தொடர்ச்சியாகக் கையிலெடுக்க சட்ட அமைப்புகள் எதுவும் இருக்கவில்லை. முதலில் விவகாரம் கொழும்பிலுள்ள மூத்த தமிழ் சட்டத்தரணிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் போதிய அளவு விரைவாக வழக்கை நகர்த்தவில்லை என்று அதில் சம்பந்தப்பட்டவர்கள் கருதியிருந்திருக்கக் கூடும். அந்த விவகாரம் கொதி நிலையை அடைந்தபோது அதில் சம்பந்தப்பட்ட தமிழரசு கட்சியை சேர்ந்த சிலர் விவகாரத்தை சுமந்திரனிடம் கையளிப்பதற்கு விரும்பினார்கள்.

இதுபோன்ற விவகாரங்களை கையாளுவதற்கு பொருத்தமான கட்சி சாராத சட்ட செயற்பாட்டு அமைப்புக்கள் தேவை என்று கடந்த பல ஆண்டுகளாக நான் எழுதி வருகிறேன். எல்லாத் தமிழ் கட்சிகளை நோக்கியும், வடமாகாண சபையை நோக்கியும், புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளை நோக்கியும், பேரவையை நோக்கியும், அவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் கட்சிகளுக்குள் நிறைய வழக்கறிஞர்கள் உண்டு. பேரவைக்குள் உண்டு. இவர்கள் அனைவரும் திரண்டு சட்ட செயற்பாட்டு அமைப்புகளை உருவாக்க தவறியது ஏன்? ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னர், முஸ்லீம் சட்டவாளர்கள் எவ்வளவு விரைவாக திரட்சியடைந்தார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் கெட்டிக்கார வழக்கறிஞர்கள் உண்டு. தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்திலும் சட்டத்தை தமது புலமை ஒழுக்கமாக கொண்ட பலர் உண்டு. இவர்கள் அனைவரையும் தாயகத்திலிருந்து யார் ஒருங்கிணைப்பது?

அப்படி ஒருங்கிணைத்தால்தான் கன்னியா, நீராவியடி விவகாரங்களில் சட்டச் சவாலை ஏற்படுத்தலாம். சிறீலங்காவின் நீதி பரிபாலன கட்டமைப்பானது தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட நீதியை வழங்கும் என்பதனை உலக சமூகத்துக்கு உணர்த்தவும் சிறீலங்காவின் சட்டக் கட்டமைப்பை அம்பலப்படுத்தவும் சட்டச் செயற்பாட்டாளர்கள் ஒன்று திரண்டு உழைக்க வேண்டும். இது தாயகத்தில் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஒரு சட்டப் பொறிமுறை மட்டுமல்ல. அதற்கும் அப்பால் இனப்படுகொலை நடந்தது என்பதனை அனைத்துலக அரங்கில் நிரூபிப்பதற்கும் அப்படி ஒரு கட்டமைப்பு தேவை.

நீராவியடியில் விக்னேஸ்வரனின் கட்சியில் எதிர்காலத்தில் வேட்பாளராக இறக்கப்படக் கூடுமென்று எதிர்பார்க்கப்படும் அன்டன் புனிதநாயகம் காணப்பட்டார். அவரோடு சேர்த்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டவாளர்களான சுகாஸூம் மணிவண்ணனும் காணப்பட்டார்கள். அங்கே பிக்குகளுக்கு எதிரான உணர்வுகளின் மத்தியில் கட்சி அரசியல் இருக்கவில்லை. சட்டத்தரணிகள் ஓரணியில் ஒன்றாக நின்றார்கள்.

இது நீராவியடி பிள்ளையாருக்காக ஏற்பட்ட ஒரு தற்காலிக ஒற்றுமையாக இருக்கக் கூடாது. மாறாக கன்னியா பிள்ளையார் கோயிலும் உட்பட எல்லா தமிழ் மரபுரிமை சொத்துக்களையும் பாதுகாப்பதற்கான சட்டச் செயற்பாட்டு இயக்கத்தை தொடங்குவதற்கு உரிய அடிப்படையாக இதை மாற்ற வேண்டும். கட்சி பேதங்களுக்கு அப்பால் தமிழ் மக்களுக்குள்ள அன்றாட பிரச்சினைகள் அனைத்துக்கும் முகம் கொடுக்கத் தேவையான ஒரு சட்டச் செயற்பாட்டு இயக்கத்தை தமிழ் வழக்கறிஞர்களும், ஓய்வு பெற்ற நீதிபதிகளும் உருவாக்க வேண்டும். இவ்வாறு தொழில்சார் செயற்பாட்டு

தொடர்ச்சி 10ம் பக்கம்...

# திலீபனின் நினைவேந்தலில் எந்த அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்கேற்றார்கள்

## தமிழ் புத்திஜீவிகள் கேள்வி

தமிழ் மக்களுக்காக தியாகத்தின் உச்சத்தை தொட்ட தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்று அஞ்சலி செலுத்தியதை திலீபனின் ஆன்மா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று தமிழ் புத்திஜீவிகள் ஆதங்கத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர். இது தொடர்பில் அவர்கள் கருத்து கூறுகையில்...




2009 பின்னரான இந்த பத்து ஆண்டுகளில் இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த அனைவரையும் பாதுகாப்பதிலும், இலங்கை அரசிற்கு ஆதரவாக ஐ.நாவில் கால அவகாசத்தை பெற்றுக்கொடுப்பதிலும் தமது மனச்சாட்சியை மறுதலித்து தமிழ் மக்களின் வாக்குகளை அடுத்த தேர்தலிலும் அபகரிப்பதற்காகவே நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றும், உருக்கமான அறிக்கைகளை விட்டும் அரசியல் நாடகம் நடத்தியுள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது...

தியாக தீபம் திலீபன் அவர்கள் 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் திகதி, மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும், சிறைக் கூடங்களிலும் இராணுவ காவல் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக காவல் நிலையங்களைத் திறப்பதற்கு மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்ற ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தன் இன்னுயிரை ஈகம் செய்திருந்தார்.

அவரின் தியாகம் இடம்பெற்று இற்றைக்கு 32 ஆண்டுகளாகியுள்ள நிலையில் தமிழ் மக்களுக்காக அவர் முன்வைத்த கோரிக்கைகளோ அவரின் சுதந்திரத் தாகமோ இந்த நிமிடம் வரையில் ஒருபடியேனும் முன்னேறியதாகவோ அல்லது நிறைவேறியதாக இல்லை.

உரிமைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் சர்வதேச சாணக்கியத்தினால் மௌனிக்கப்பட்ட போதும் சனநாயக ரீதியில் எமது மக்கள் போராடிக்கொண்டே இருக்கின்றார்கள். ஆனால் அந்த மக்களின் இன்னல்கள், துன்பங்கள், கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி ஈகம் செய்த போராளிகளின் உறவினர்கள் அனைத்து தரப்பினரிடத்திலும் ஒவ்வொரு தேர்தல்களிலும் வாக்குகளை சூறையாடிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015இற்குப் பின்னர் முழுமையாக சிங்கள தேசத்தின் ஆட்சிப் பீடத்திற்கு முண்டுகொடுத்து வருகின்றது.

வரவு செலவுத் திட்டங்கள் முதல் நம்பிக்கை இல்லாப் பிரேரணைகள் வரையில் அற்பசொற்ப விடயங்களை நிபந்தனைகளாக வைத்து கண்கட்டி வித்தை காட்டிக் கொண்டிருக்கின்றது கூட்டமைப்பு. மேலும், முள்ளிவாய்க்கால் அவலம் அரங்கேறியது முதல் இறுதியாக அதே முல்லை மண்ணில் பௌத்த தேரர்களின் சட்டத்தினை மீறிய செயற்பாடுகளையும், காடைத்தனத்தையும், மௌனமாக கைகட்டி வேடிக்கை பார்ப்பவர்களிடத்தில் எம்மினம் இன்னும் எதனை எதிர்பார்க்க முடியும்?

தமிழனத்தின் விடுதலைக்காக, சுதந்திரத்திற்காக மடிந்த மாபெரும் தியாகியின் தாகம் இன்றும் அவ்வாறே இருக்கையில் அவரின் நினைவேந்தல் நிகழ்வினை தாமே முன்னெடுத்தோம் என்று மார்பு தட்டிக்கொள்வதற்கே கூட்டமைப்பு திட்டமிட்டு விளைந்திருக்கின்றது. சுதந்திர தாகம் தீர்க்கப்படாத தியாகியின் நினைவுத் தூபியை புனரமைப்பதற்கோ, அல்லது பாதுகாப்பதற்கோ ஒருசதத்தைக்கூட செலவிடாத இந்த பிரதிநிதிகள் நினைவேந்தல் நிகழ்வில் ஊடகப் பிரசுரங்களுக்காக முன்றியடித்துக்கொண்டு முன்வரிசைக்கு வரமுயன்றமையையும் காணமுடிந்தது.

விடுதலைக்கான ஒரு தியாகியின் தியாகத்தில் அரசியல் சுயலாபத்தினை அடைவதற்கு விளைந்த இவர்களின் செயற்பாடுகள் மிகவும் வன்மையாக கண்டனத்திற்குரியவையே.

ஆறு கடக்கும் வரையில் அண்ணன், தம்பி பின்னர் நீயாரோ, நான் யாரோ என்ற மனநிலையில் ஒவ்வொரு தேர்தல்களிலும் எம்மினத்தினையே கருதும் இந்த இரட்டை வேடதாரிகள், விடுதலை வித்துக்களின் எந்தவொரு நினைவேந்தல்களிலும் பங்குபற்றுவதற்கே அருகதையற்றவர்கள்.

இத்தகையவர்களை மீண்டும் மக்கள் பிரதிநிதிகளாக்குவதா? இல்லையேல் எம்மினத்தின் விடுதலைக்காக பற்றுறுதியுடன் இருக்கும் சக்திகளை அடையாளம் காண்பதா? என்பதே தமிழினத்தின் முன்னுள்ள கேள்விகளாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




6ம் பக்கத் தொடர்ச்சி... இலங்கைக்கு ஐ.நா அதிர்ச்சியளித்துள்ளது

ஐ.நாவின் விசாரணைக்குழுவொன்று ஆதாரங்களுடன் அறிக்கையிட்டிருந்தது. யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை செய்து நீதிவிசாரணைகளை முன்னெடுப்பதாக அரசு உறுதியளித்தபோதிலும் அது இன்னமும் இடம்பெறவில்லை. இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் இறுதித் தருணங்களில் 40,000ற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைப் படையினரே இந்த இனப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதற்கு நேரில் கண்ட சாட்சிகளும் உள்ளன.

ஐ.நாவின் அமைதிப்படை நடவடிக் கைகளில் தங்கள் படையினரை ஈடுபடுத்தும் நாடுகளுக்குத் தங்கள் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா? என விசாரணை செய்து ஆராயும் கடப்பாடு உள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் லெபனானில் பணிபுரிய அனுப்பப்பட்ட இலங்கை படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா? என்பது குறித்து ஆராயப்படவில்லை. 2017 இல் ஹெய்ட்டியில் அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கைப் படையினர் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்காகத் திருப்பி அனுப்பப்பட்டனர். விசாரணைகளை மேற்கொள்வதாக இலங்கை அரசு உறுதியளித்துள்ள போதிலும் இன்னமும் அது இடம்பெறவில்லை. தமது படையினரை போர் வெற்றி வீரர்களாகக் காட்டி அரசியல் நடத்தும் இலங்கை அரசாங்கம் அவர்களை, போர்க் குற்ற வாளிகளாக விசாரிப்பதை விரும்புவதில்லை. அவர்களைப் பாதுகாப்பதன் மூலமாகவே சிங்கள வாக்குகளைப் பெறுவது அவர்களின் உபாயம். இந்தப் பின்னணியில் சவேந்திர சில்வாவின் நியமனம் இலங்கை இராணுவம் பெரும் துஷ்பிரயோகங்களை இழைத்தவர்களுக்கு தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படவேண்டும் என்ற கொள்கையை ஸ்தாபனமயப்படுத்தியுள்ள ஒன்று என்பதை அம்பலப்படுத்தியுள்ளது.

இதனை அம்பலப்படுத்துவதில் ஜஸ்மின் சூக்கா, பிரான்ஸிஸ் ஹரிசன் ஆகியோரின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. நன்கு திட்டமிட்ட முறையில் துல்லியமாக காய் நகர்த்தியதன் மூலமாகவே இதனை அவர்கள் சாதித்தார்கள். ஜெனீவாவிலும், உள்நாட்டிலும் முழங்கும் தமிழ் அரசியல் தலைவர்களும், செயற்பாட்டாளர்களுக்கும் இவர்களின் செயற்பாடு முன்னுதாரணமாகவேண்டும்."

இவ்வாறு தமிழ்த்தேசிய அரசியல் அவதானிப்பு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சத்தமின்றி, இரத்தமின்றி நடக்கும் போர்

தீபச்செல்வன்

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அவர்களின் சமயம், கலை, பண்பாடுகளை அழிக்க வேண்டும் என்ற இன அழிப்பு கொள்கையை சிங்களப் பேரினவாதிகளும், அதன் அரசும் ஈழ மண்ணில் பிரயோகிக்கிறது. 2009 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், தமிழீழ மண்ணின் பண்பாட்டையும், வரலாற்றையும், கலைகளையும் அழிக்கின்ற கொடிய போக்கு தீவிரமாக நடைபெறுகின்றது. அண்மையில் முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணியில் பிக்கு ஒருவர் தகனம் செய்யப்பட்ட நிகழ்வும், பின் முள்ளிவாய்க்கால் கால பண்பாட்டு இனஅழிப்பு ஆகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு செம்மலைப் பகுதியில் உள்ள நீராவியடியில் பூர்வீகமான பிள்ளையார் ஆலயம் ஒன்று




அமையப்பெற்றுள்ளது. போர் முடிவடைந்த பின்னர் அப் பகுதியில் நிலை கொண்ட சிங்கள இராணுவம் பிள்ளையாருக்கு அருகில் புத்தர் சிலை ஒன்றை வைத்தது. அதனைத் தொடர்ந்து தென்னிலங்கையில் இருந்து ஒரு சிங்கள பிக்கு வந்து அங்கு விகாரை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். இது பிள்ளையார் கோயில் பக்தர்களுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. அத்துடன் பிள்ளையார் ஆலய வழிபாடுகளுக்கும் குறித்த பிக்கு பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்தினார்.

பிள்ளையாருக்கு பொங்கல் செய்வதற்கு பிக்கு தடையை ஏற்படுத்தி அடாவடி செய்தார். அத்துடன் ஆலய முன்றலில் பாரிய புத்தர் சிலை ஒன்றையும் உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தமிழ் மக்களின் வாக்குகளினால்தான் சனாதிபதி ஆகினேன் என்று மைத்திரிபால சிறிசேன பெருமைபட்டுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கும்போதே குறித்த பிக்குவின் அராஜகங்களும் நடந்தன. அதைப்போல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாம் காப்பாற்றிக் கொண்டு இருந்த சமயத்தில்தான் பிக்கு ஆலயத்தில் பொங்கல் பானைகளை தூக்கி வீசி நல்லிணக்கம் செய்து கொண்டிருந்தார்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய ஆக்கிரமிப்பு தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிக்குவின் ஆக்கிரமிப்பு செயல்கள் தற்காலிகமாக நீதிமன்றத்தால் இடை நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில்தான் புற்றுநோய் காரணமாக அண்மையில் குறித்த பிக்கு மரணித்துள்ளார். கொழும்பில் மரணித்த பிக்குவை ஆலயத்தில் தகனம் செய்வதற்காக முல்லைத்தீவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இந்து — சைவ முறைகளுக்கு மாறாக, ஆலயப் புனிதத்தை பாதிக்கும் வகையில் ஆலய வளாகத்தில் சடலத்தை எடுத்து செல்வதோ, தகனம் செய்வதோ தடுக்கப்பட்டது. அத்துடன் ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் தகனம் செய்ய கட்டளையிடப்பட்டது.

உயிரோடு இருந்தபோதும் தமிழ் மக்களின் சமய நம்பிக்கைகள், வழிபாடுகளுக்கு பங்கம் விளைவித்த பிக்கு, இறந்த பிறகும் தன் செயல்களை தொடர்ந்தார். பொதுபலசேனா என்ற இனவாத இயக்கத்தை சேர்ந்த ஞானசாரதேரர் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணியருகில் பிக்குவின் உடலை தகனம் செய்தனர். இந்த நிகழ்வு ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பெரும் வேதனைக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது. ஆலய வளாகத்தில் உடலை தகனம் செய்கின்ற இழிசெயலை சிங்கள பௌத்த பேரினவாதிகள் நிறைவேற்றி, இலங்கையின் நீதிக்கட்டமைப்பின் போலி முகத்தை காட்டினர்.

இதற்கு எதிராக தமிழ் மக்கள் முல்லைத்தீவில் திரண்டு பெரும் போராட்டத்தை நடாத்தியுள்ளனர். சிங்களப் பேரினவாதிகளின் நீதிமன்ற தீர்ப்புக்களுக்கு எதிரான அநீதிகளை உடன் நிறுத்த வேண்டும் என்பதை சிங்கள அரசிடமும், சர்வதேசத்திடமும் வலியுறுத்தியுள்ளனர். பேரினவாத பிக்குகளின் இந்த செயற்பாடு பல்வேறு விடயங்களை தெளிவாக்குகின்றன. தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து வாழ முடியாது என்பதை மீண்டும் இந்த நிகழ்வு எடுத்துரைத்துள்ளது. ஆலயத்தை புனிதமாக கருதும் தமிழர்களும், ஆலயத்திற்குள் உடலை எரிக்கும் சிங்களவர்களும் ஒருபோதும் இணைந்து வாழமுடியாது.

குறித்த பிக்குவின் உடலை அங்கு எரிப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. அங்கு வைக்கப்பட்ட புத்தர்சிலையை போல அந்த பிக்குவும் தமிழர்களின் நிலத்தை ஆக்கிரமிப்பார். உயிரோடு இருந்து செய்ததை இறந்த பிறகும் செய்து கொண்டிருப்பார். கொழும்பில் தமிழர்களின் வாக்குகளுடனும், ஆதரவுடனும் ஆட்சிகள் தொடர்கின்ற



நிலையில், சிங்களப் பேரினவாத அரசு அதற்கான பரிசை இவ்வாறுதான் வடக்குக் கிழக்கில் வழங்குகின்றது. தமிழர்களின் ஆதரவுடன் ஆட்சி நடக்கும்போதே இந்த அநீதி என்றால் ஈழ நிலத்தினதும் தமிழர்களதும் எதிர்காலம் எப்படி இருக்கும்?

இந்த நிகழ்வுகள் நடைபெறுவதை அண்மித்த நாட்களில் இந்தியாவின் ஆளும் கட்சியை சேர்ந்த சுப்பிரமணியன் சுவாமி இலங்கைக்கு வந்தார். மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்சவின் திருமணத்திற்காக வந்த அவர் கோத்தபாய ராஜபக்சவை தாம் ஆதரிப்பதாகவும் இந்தியர்களின் பெரும்பான்மை ஆதரவு ராஜபக்சக்களுக்கு உண்டு என்றும் கூறியுள்ளார். அதே கோத்தபாய ராஜபக்ச, நீராவியடிப் பிக்குகள் செய்த காரியம் மிகவும் சரியானது என்று பாராட்டு சான்றிதழும் வழங்கியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவாக இருக்கட்டும். இன்றைய ஆட்சியார்களான மைத்திரியும், ரணிலுமாக இருக்கட்டும், அனைவரும் இந்தியாவில் உள்ள திருப்பதி கோவிலுக்குச் சென்று எடைக்கு தட்சணையும் செய்து, தலையையும் முட்டிக் கொள்கின்றனர். ஆனால் ஈழத்தில் உள்ள இந்து — சைவ ஆலயங்களுக்கு என்ன செய்கின்றனர்? மகிந்த ராஜபக்சவின் காலத்தில் ஈழத்தின் சைவ ஆலயங்கள் குண்டு வீசி அழிக்கப்பட்டன. 2009இற்குப் பிறகும் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள இந்து ஆலயங்கள் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளன. இன்றும் அவ்வாறான அழிப்புக்கள் தொடர்கின்றது. ஆலயங்களை அண்டிய இடங்கள் இராணுவத்தின் கோட்டைகளாக உள்ளன.

கிளிநொச்சியில் கனகாம்பிகை அம்மன் ஆலயத்தை சுற்றி இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிகளும், பீரங்கிகளும் நீட்டிய இராணுவத்தின் மத்தியில் அம்பாள் சிறை இருக்கிறாள். இவ்வாறு ஈழத்து ஆலயங்கள்மீதான இன அழிப்புப் போரை செய்து கொண்டு, பௌத்தம் இந்து மத்தின் ஒரு பிரிவு, இந்திய சிறீலங்காவை ஆதரிக்க வேண்டும் என்று இந்தியாவின் ஆதரவையும் பெற்றுக் கொண்டு எங்கள்மீதான அழிப்பு தொடர்கின்றது. மறுபுறத்தில் நாம் பௌத்தர்கள் என்று சீனாவின் ஆதரவையும் ராஜபக்சவினர் பெற்றுக் கொண்டு அங்கும் இங்குமாய் அரசியல் செய்கின்றனர்.

இந்தியாவின் பேராதரவை பெற்றுக் கொண்டே, ஈழத் தமிழர்களை முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்தது இலங்கை அரசு. அதைப்போலவே இன்றும் இலங்கைக்கு பெரும் ஆதரவுகளைப் புரிவதன் மூலமாக ஈழத்தின் இந்து — சைவ ஆலயங்களை ஒடுக்கி அழிக்க இந்தியா உதவுகின்றது. இது இந்திய நாட்டு அரசுக்கு தெரியவில்லையா? தன் கையைக் கொண்டே கண்ணை குத்தும் இந்த செயலை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். சிவபூமி என்ற ஈழத் தீவை பௌத்த சிங்கள சீனப் பூமியாக மாற்றும் சிங்களத்தின் தந்திரத்தை உணர வேண்டும்.

பௌத்த சிங்களப் பேரினவாத வெறி ஒருபோதும் அடங்காது என்பது மீண்டும் மீண்டும் உணர்த்தப்படுகின்றது. அது ஈழத் தமிழ் மக்களின் குருதியை உறிஞ்ச எப்போதும் தயாராக உள்ளது. இத்தகைய வெறியர்களின் மத்தியில் எமது தேசத்தையும், நிலத்தையும், பண்பாட்டையும் பாதுகாப்பதாக இருந்தால் தமிழீழமே சரியான தீர்வாக அமையும். இல்லையேல் மெல்ல மெல்ல புத்தர்சிலைகளும், பிக்குகளும் இம் மண்ணில் புதைந்து எமை நிலத்திலிருந்தும், வரலாற்றிலிருந்தும் அழித்து விடும். இராணுவமும், அவர்களால் நடப்படும் அரச மரங்களும், புத்தர்சிலைகளும் துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் விட ஆபத்தானவைகள். அவைகளின் ஊடாக இரத்தமின்றி, சத்தமின்றி இன அழிப்புப் போர் நடந்து கொண்டிருக்கிறது.

# போராடி வென்ற சஜித் பிரேமதாஸ மைத்திரியின் ஆதரவு யாருக்கு?

**பூமிகன்**

ஐ.தே.க யின் சனாதிபதி வேட்பாளராக கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கட்சியின் மத்திய செயற் குழுவினால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த சில மாதங்களாக ஐ.தே கட்சிக்குள் இருந்து வந்த வேட்பாளர் இழுபறி நிலை இதன் மூலம் முடிவுக்கு வந்துள்ளது. கடுமையான போராட்டத்தின் மூலம் கட்சியின் வேட்பாளராக சஜித் வந்திருந்தாலும், அவர் தாண்டிச் செல்ல வேண்டிய தடைகள் இன்னும் பல உள்ளன.

தேர்தல் பிரச்சாரத்தை நோக்கி கட்சி இறங்குவதற்கு முன்னதாக, கூட்டணியைப் பலப்படுத்துவதற்கான பேரங்கள் ஆரம்பமாகியுள்ளன. சஜித் களமிறங்குவதால் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கும் என்ற கேள்வியும் எழுகின்றது. மொட்டு தரப்புடன் தமது பேரத்தை உயர்த்திக்கொள்ள மைத்திரிக்கு இது அதிக வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றது. அதேவேளையில், சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் கூட்டணி அமைப்பது குறித்த பேச்சுக்களுக்காக மைத்திரிக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார் சஜித்.



வேட்டபாளர் நியமனத்தில் இணக்கத்துக்கு ரணில் முதலில் பச்சைக் கொடி காட்டியது கரு, ரணில், சஜித் ஆகிய மூவரின் நேரடிச் சந்திப்பின் போதுதான். அது புதன்கிழமை சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. அப்போது ரணில் விதித்த சில நிபந்தனைகளுக்கு சஜித் இணங்கியிருந்தார் என முதலில் தெரிவிக்கப் பட்டது. ஆனால், பின்னர் பகிரங்க மேடையில் அப்படித் தாம் எந்த நிபந்தனைக்கும் இணங்கவில்லை என்று சஜித் அறிவித்தார். எந்த நிபந்தனைகளுக்கும் இணங்கி வேட்பாளர் நியமனத்தை தான் பெறப்போவதில்லை எனவும் அவர் ஆக்ரோஷமாக அறிவித்தார். தென்பகுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் இதனை அவர் தெரிவித்தார்.

சஜித்தின் இந்த அறிவிப்பு ரணிலைச் சீற்றத்துக்கு உள்ளாக்கியது. அப்படியானால் சஜித்துக்கு விட்டுக்கொடுக்க முடியாது என்ற நிலைப்பாட்டை எடுக்க முயன்றார் ரணில். இணக்கம் வந்த பின்னர் குழப்பாதீர்கள் என ரணிலுடன் நின்ற சிரேஷ்ட தலைவர்கள் ஆலோசனை கூறியிருக்கின்றார்கள். அழுத்தம் கொடுத்தார்கள். "நான் பிரதமர் பதவியையும் கட்சித் தலைவர் பதவியையும் துறந்து விட்டு அரசியலில் இருந்தே ஒதுங்கி விடுகிறேன். நீங்கள் என்னவாவது செய்யுங்கள்" என்று வியாழன் காலை ஒரு நிலைப்பாட்டை நோக்கி நகர முயன்றார் ரணில். அந்தளவுக்கு அவர் விரக்தியடைந்திருந்ததாக உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

கட்சியின் சிரேஷ்ட தலைவர்களும், சஜித் தரப்பினரும், ரணிலை சமாதானப்படுத்த கடுமையாக முயன்றார்கள். சஜித்தின் தேர்தல் பிரசாரத்துக்கு பிரதமர் ரணிலின் ஆதரவு தேவை என்பதற்காக மட்டுமல்ல. இந்தச் சமயத்தில் ரணில் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தால் அந்தப் பதவியை மீள மஹிந்த ராஜபக்ஷவுக்கு சனாதிபதி மைத்தி வழங்கிவிடுவார் என்பதும் இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகின்றது.

அப்படி நேர்ந்தால் கோட்டா தரப்புப் பிரசாரம் சூடு பிடித்துவிடும். சஜித் உட்பட ஐ.தே கயினர் எல்லோரும் அமைச்சர் பதவிகூட இல்லாமல் வெறும் எதிரணி உறுப்பினர்களாகத்தான் பிரசாரம் செய்ய வேண்டி இருக்கும். இனால்தான் ரணிலை சமாதானப்படுத்த முயன்றனர். இந்த பாராளுமன்ற பதவிக் காலம் முழுவதும் அவர் பிரதமராகத் தொடர வேண்டும் என வற்புறுத்தினர். அதற்கான உத்தரவாதத்தையும் அவர்கள் வழங்கினார்கள். அதன் பின்னரே சஜித்தை ஏற்றுக்கொள்ள ரணில் தயாரானார் எனச் சொல்லப்படுகின்றது.

நிபந்தனைகளின் பேரில் தான் வேட்பாளர் நியமனத்தை சஜித்தால் பெற முடிந்தது என்பது தேர்தல் களத்தில் சஜித்தின் அரசியல் நிலையைக் குறைந்து விடும் எனச் சுட்டிக்காட்டிய கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள், அதனால் அந்த விடயத்தில் விட்டுப்பிடிக்குமாறும் கட்சியின் ரணிலை வலியுறுத்தினார்கள். அப்பிரச்சினையை தீர்க்கும் திட்டம் ஒன்றையும் அவர்கள் முன்வைத்தனர்.

சஜித்துக்கு நிபந்தனையாக ரணில் முன்வைக்கும் விடயங்கள் அடங்கிய பிரேரணை ஒன்றை கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முன்மொழிந்து அதனை நிறைவேற்றுவது. கட்சியின் நிலைப்பாடாக அதை வெளிப்படுத்துவது. அதன் பின்னர் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக சஜித்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு அறிவிப்பது. கட்சியின் வேட்பாளர், கட்சின் செயற் குழுத் தீர்மானத்தை மீறிச் செயற்பட முடியாது என்பதால், அந்தத் தீர்மானத்துக்கு சஜித்தும் கட்டுப்பட்டேயாகவேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு, தேர்தல் முறைமை சீரமைப்பு ஆகிய விடயங்கள் அந்தப் பிரேரணையில் முக்கியமாக இடம் பெற்றிருந்தன. அதனைவிட அடுத்த ஆறு வருட காலத்துக்கு கட்சியின் தலைவராகவும், பிரதமராகவும் ரணில் தொடர்ந்தும் இருப்பதற்கு சஜித் இணக்கம் தெரிவித்தார். சஜித் வெற்றி பெற்றால்தான் பிரதமர் பதவியில் ரணில் தொடரலாம் என்பதால், சஜித்தின் வெற்றிக்காக ரணிலும் உழைக்க வேண்டியிருக்கும் என்பது அவர்களுடைய திட்டம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இதுவரை இணங்கிய அம்சங்களின் அடிப்படையில் தொடர்வது என்பது தொடர்பிலும் சஜித் இணக்கம் தெரிவித்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதன் மூலம் தமிழ் வாக்குகளை அவரால் பெறக் கூடியதாக இருக்கும் என ஐ.தே.க வுடன் இணைந்து செயற்படும் தமிழ் அரசியல்வாதிகள் கருதுகின்றார்கள். தென்பகுதியிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது அவர்களுடைய கருத்து.

ஐ.தே.க யின் பங்காளிக் கட்சிகளான முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜாதிக ஹெல உருமய, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன சஜித்தான் சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். அத்துடன் ஐ.தே.க எம்.பி.க்களில் கணிசமான தொகையினரும், ரணிலுக்கு நெருக்கமானவர்களும் சஜித் ஆதரவாளர்களாக மாறத் தொடங்கி யிருந்தார்கள். அடிமட்ட சிங்கள மக்களின் வாக்குகளை வெல்லக்கூடியவராக சஜித்தான் அடையாளம் காணப்பட்டிருந்தார். சஜித்தை தடுப்பதற்கு அரசியல் ரீதியாக ரணில் முன்னெடுத்த அனைத்து உபாயங்களும் தோல்வியடைந்தது.

சஜித் சனாதிபதியானால் தன்னுடைய அரசியல் எதிர்காலம் என்னவாகும் என்ற அச்சம் ரணிலுக்கு இருந்தது. அதற்கான உத்தரவாதமாகத்தான் கட்சியின் தலைவராகவும், பிரதமராகவும் ரணில் தொடர்வதற்கான உறுதி சஜித் தரப்பால் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதனைவிட, ரணிலின் தீவிர ஆதரவாளராக இருந்த ரவி கருணாநாயக்கவும் இப்போது சஜித்துடன் இணங்கிச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார். தனக்கு நிதி அமைச்சர் பதவி தரப்படுவதுடன், சஜித் பிரேமதாசவின் வசம் தற்போதுள்ள பிரதித் தலைவர் பதவிக்குத் தான் நியமிக்கப்பட வேண்டும் என்பதும் அவரது கோரிக்கையாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதன் அடிப்படையில் சஜித்துடன் இணங்கி அவரது வெற்றிக்காகச் செயற்பட ரவி கருணாநாயக்கவும் தயாராக இருக்கிறார்.

சஜித் தெரிவால் நன்மையடைபவர்களில் முக்கியமானவர் மைத்திரி. சஜித்துடன் நெருக்கமானவர் அவர். மொட்டு அணியுடனான பேரத்தை உயர்த்திக்கொள்ள அது அவருக்கு உதவியிருப்பதும் தெரிகின்றது. கோத்தா, மகிந்த, பசில் ஆகிய மூன்று ராஜபக்ஷக்களும் சனிக்கிழமை ஒன்றாகச் சென்று மைத்திரியைச் சந்தித்துப் பேசியிருந்தது அவருக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தைக் காட்டியது. தேர்தல் களம் கடும் போட்டியாக இருக்கும் நிலையில், மைத்திரியின் கைகளில் உள்ள சுதந்திரக் கட்சியின் ஆதரவு அவசியம் என ராஜபக்ஷக்கள் கணக்குப் போடுகின்றார்கள். எனினும் சனிக்கிழமைப் பேச்சுக்கள் வெற்றி யளிக்கவில்லை.

அதேவேளையில் சஜித்தும் சுதந்திரக் கட்சியின் ஆதரவைக் கோரியிருக்கின்றார். சுதந்திரக் கட்சியிடம் சுமார் 8 முதல் 10 வீதம் வரையிலான வாக்குகள் உள்ளன. அதனைக் கொண்டு தமது பேரம்பேசும் பலத்தை அதிகரித்துக்கொள்வதும், அதன் மூலம் அடுத்து ஆட்சி அமைக்கப்போகும் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு மைத்திரி திட்டமிடுகின்றார்.

நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு இன்னும் (ஒக்டோபர் 7) ஒரு வாரம் மட்டுமே உள்ளது. இந்த ஒரு வாரகாலத்தில் பிரதான கட்சிகளின் பேரங்களைப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

# காணாமலாக்கப்பட்ட சிறுவர்களுக்காக அனைத்து தமிழ் உறவுகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்

**ஜெனீவாவிலிருந்து முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் இணைப்பாளர் மரியசுரேஷ் ஈஸ்வரி அழைப்பு**

இறுதி யுத்தம் நிறைவடைந்த பின்னர் சர்வதேச சமூகத்தில் நம்பிக்கை வைத்து தங்களின் தாய் தந்தையுடன் சரணடைந்த ஐம்பதிற்கும் அதிகமான சிறுவர்களுக்கு என்ன நடந்தது என்று இலங்கை அரசு பதில் கூறவில்லை. கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதிவேண்டி எதிர்வரும் 1ஆம் திகதி ஒக்டோபர் மாதம் சர்வதேச சிறுவர் தினத்தில் இராணுவத்தினரால் வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது சிறுவர்களுக்கான நீதியினை பெற சர்வதேச ரீதியிலும், எமது தாயகத்திலும் நாம் குரல் கொடுக்க இருக்கின்றோம்.

நாம் தற்போது ஜெனீவாவில் 42 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்ற நிலையில் இங்கிருந்தவாறே எமது தாயகத்திலே வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது சிறுவர்களுக்கான நீதியினை பெற்றுக்கொள்வதற்கு தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் உள்ள ஒவ்வொரு உறவுகளும் குரல் கொடுக்க வேண்டும் என்று உரிமையுடன் அழைப்பு விடுக்கின்றோம்.

இறுதி யுத்தத்தின் போது நாம் இழந்த பேரிழப்புக்கு, எமக்கு இழைக்கப்பட்ட துரோகங்களுக்கான நீதி மறுப்புக்கு மத்தியில் காணாமலாக்கப்பட்ட 50 சிறுவர்களுக்கான நீதி இன்றுவரை பெறப்படவில்லை. நம்பிக்கையின் அடிப்படையில் எமது சிறுவர்களை இராணுவத்திடம் ஒப்படைத்த எமக்கு சனநாயக போர்வையில் ஆட்சி நடத்தும் அரசாங்கம் எந்த வகையிலும் பொறுப்புக் கூறவில்லை. இந்த சின்னஞ்சிறிய நாட்டிலே கைகளிலே கொடுத்தவர்களை காணவில்லை என்று அரசு தனது பொறுப்பை தட்டிக் கழிக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் தான் எட்டு இடங்களிலும் கவனயீர்ப்பு போராட்டங்கள் நடைபெற இருக்கின்றது. இதன்போது நாம் எமது குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளி உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டவேண்டும்.




அதே வேளை புலம்பெயர் தமிழ் உறவுகள் வாழும் இடங்கள் பலவற்றிலும் எமது சிறுவர்களின் நீதிக்கான குரல் சிறுவர் தினத்தில் எழுப்பப்பட இருக்கின்றது. இதில் எந்தவிதமான அரசியல் வேறுபாடுகளும் இன்றி எமது குழந்தைகளுக்காக அனைத்து புலம்பெயர் தமிழ் உறவுகளும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு இந்த விடயத்தில் தமிழக மக்களும் அரசியல் தலைமைகளும் குரல்கொடுக்க முன்வரவேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்தார்.

# இது சிங்கள பௌத்த நாடு அல்ல!

## சஜித் பிரேமதாஸ குறித்து விக்னேஸ்வரன் கருத்து

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்குரிய நாடு அல்ல. புத்தர் காலத்திற்கு முன்பிருந்தே இந்த நாடு சைவத் தமிழ் நாடாக இருந்தது என வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சஜித்தைத் தேர்ந்தெடுத்தமை எனக்குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சி. அவருக்கு ஒரு கெட்டியான பௌத்த பின்னணி இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் ஒரு சில விடயங்கள் அவர் தமிழர் மீது தன்னுறுதியில்லாத மனோநிலையைக் கொள்ளக் கூடியவாறு அமைந்திருக்கலாம்.

அவரின் தந்தையார் தமிழ்ப் போராளிகளின் வன்முறைக்கு இலக்கானார் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை ஒரு காரணம். அடுத்தது நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்தத்திற்கும், புத்தரின் போதனைகளுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை அவர் உணர்ந்து கொண்டுள்ளாரோ தெரியவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அவரின் 'இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு' என்ற அதி தீவிர சிந்தனை தடையாக இருக்கலாம். ஆனால் அவர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்குரிய நாடு அல்ல. புத்தர் காலத்திற்கு முன்பிருந்தே இந்த நாடு சைவத் தமிழ் நாடாக இருந்தது.

பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதே தமிழ் இந்துக்கள் மத்தியில் தான். மேலும் சிங்கள மொழியானது நடைமுறைக்கு வந்தது கி.பி.6ஆம் அல்லது 7ஆம் நூற்றாண்டிலேயே. இன்று 2000 ஆண்டுகளுக்கு மேலான தொல்பொருள் சார்ந்த பௌத்த எச்சங்கள் என்று கூறப்படுபவை தமிழ் பௌத்தர்கள் கால எச்சங்கள்.

இன்று நாட்டின் 75 சதவிகிதமானவர்கள் சிங்கள பௌத்தர்கள் என்பது உண்மையே. ஆனால் வட கிழக்கின் 85 சதவிகிதத்திலும் அதிகமானவர்கள் தமிழ்ப் பேசும் மக்களே. எங்களைப் பொறுத்தவரையில் எந்த மதத்திற்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதே எமது நிலைப்பாடு. வடக்கில் இந்து சமயமானது ஆதிகாலந் தொட்டு பேணப்பட்டு வந்துள்ளது. அது மற்றைய மதங்கள் யாவற்றையும் மதிக்கும் ஒரு சமயம்.

'உண்மை ஒன்று. அதை ஞானிகள் பல நாமங்களால் குறிப்பிடுகின்றார்கள்' என்பதே இந்து மக்களின் கருத்து வெளிப்பாடு. அதனால் தான் வட கிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தமக்கு பிரிக்கப்படாத நாட்டினுள் சுயாட்சியைக் கோருகின்றார்கள். 'தேசிய அபிமானிகள்' என்ற வகையில் ஆட்சி செய்பவர்களில் இருந்தும் வித்தியாசமான ஒருவராக சஜித் சிறந்து விளங்க முடியும். இதுவரையில் ஆட்சி ஓச்சியவர்கள் அறிவுடைமையையும், உணர்வுடைமையையும் வெளிக்காட்ட முடியாதவர்களாகவே இருந்தார்கள்.

தன்னால் பின்னப்பட்ட மேற்கூறப்பட்ட வலையில் இருந்து சஜித் விடுபட்டாரானால் எல்லா மக்களும் பாராட்டும், அதி சிறந்த சனாதிபதியாக வரக்கூடிய தகைமைகள் கொண்டவர் அவர் என்பது எனது கருத்து என்றும் அவர் கூறினார்.

---

6ம் பக்கத் தொடர்ச்சி... ஆமத்துறுவுக்கு

அமைப்புகளை உருவாக்கினால் அது சாதாரண மக்களுக்கு தொண்டு செய்யும் அரசியல் பாரம்பரியத்தை பலப்படுத்தும். இவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எல்லாத் துறைசார் ஆளுமைகளும் தமது துறைகளில் அர்ப்பணிப்போடு தொண்டு செய்ய முன்வந்தால் அது தமிழ் அரசியலை வேறொரு கட்டத்துக்கு திருப்பும். ஏனென்றால் தொண்டு அரசியல் அதன் இயல்பில் பிழைப்புவாத அரசியலுக்கு எதிரானது.

அப்படி ஒரு சட்டச் செயற்பாட்டு இயக்கம் இருந்திருந்தால் யாழ்ப்பாணம் நாக விகாரையின் அதிபதியின் உடலை முற்ற வெளியில் தகனம் செய்ய முயற்சித்த பொழுது பலமான எதிர்ப்பைக் காட்டி இருந்திருக்கலாம். அதுதான் தகன அரசியலின் தொடக்கம். அதுபோலவே திருகோணமலையிலும், மாணவர் கொலை வழக்கிலும் குமாரபுரம் கொலை வழக்கிலும், பொருத்தமான விதங்களில் சட்டச் சவால்களை ஏற்படுத்தியிருந்திருக்கலாம். அந்த வழக்குகளில் முதல் கட்டமாகத் தமிழ்த் தரப்பு தோற்றுவிட்டது.

ஆனால் நீராவியடிப் பிள்ளையார் கோவில் விவகாரத்தில் தமிழ் தரப்பு சட்டரீதியாக வெற்றிபெற்றது. ஆனால் தீர்ப்பை அமுல்படுத்த காவல் துறையினர் போதியளவு முயற்சிக்கவில்லை என்பது மட்டுமல்ல அவர்கள் தீர்ப்பை மீறியவர்களை பாதுகாத்தார்கள் என்று சம்பவ இடத்தில் நின்ற சட்டவாளர்கள் கூறுகிறார்கள். சட்டவாளர் சுகாஸ் திரும்பத் திரும்ப ஒரு விடயத்தைத் தெளிவாகக் கூறுகிறார்..."தமிழ் மக்கள் சட்டத்தை, நீதிமன்றத்தை மதிக்கிறார்கள்" என்று.

சட்ட வாளர் மணிவண்ணனும் ஒரு சொல்லைத் திரும்பத் திரும்ப அழுத்தமாகக் கூறுகிறார்.... "கௌரவ நீதிமன்று" என்று. ஆனால் நீதிமன்றத்தின் கௌரவத்தையும், சட்டத்தையும் பாதுகாக்க வேண்டிய காவல்துறை நீதிமன்றத்தை அவமதித்தவர்களைப் பாதுகாத்தது. எப்படி சில மாதங்களுக்கு முன் மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தை அவமதித்த ஞானசார தேரரை மன்னித்து விடுதலை செய்தாரோ அப்படி. இலங்கைத்தீவின் நீதி தமக்குக் கட்டுப்பட்டது என்று ஆமத்துறுக்கள் கருதுகிறார்கள். படைத்தரப்புக் கருதுகிறது.

இதை நீதிமன்ற அவமதிப்பாக மட்டும் சுருக்கலாமா? அப்படி சுருங்கினால் அதைத் தனிய ஒரு சட்ட பிரச்சினையாகவே கையாள வேண்டி வரும். ஆனால் அது ஒரு சட்டப் பிரச்சினை மட்டுமல்ல. நீராவியடியில் சட்டவாளர் சுகாசோடு வாதாடிய ஒரு பிக்கு கை விரலை உயர்த்திக் காட்டி என்ன கூறுகிறார்? "இலங்கைத் தீவில் ஆமதுறுவுக்கு முதலாம் இடம். உங்களுக்கு தெரியாதா?" என்றல்லவா கூறுகிறார்?

அதுதான் பிரச்சினை. ஆமத்துறுக்கள் நீதி பரிபாலனக் கட்டமைப்பை விடவும் உயர்வானவர்களாக மாறியது என்பது அரசியல்தான். அது சட்டப் பிரச்சினை அல்ல. அதை ஒரு அரசியல் விவகாரமாகத்தான் அணுக வேண்டும்.

நீராவியடி பிள்ளையார் மட்டுமல்ல கன்னியா பிள்ளையார், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம், அரசியல் கைதிகளின் போராட்டம், காணிக்கான போராட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் அனைத்துமே அரசியல் விவகாரங்கள். அவற்றுக்கு அரசியல் தீர்வுதான் வேண்டும். அதற்காகத் தமிழ் எதிர்ப்பை, தமிழ்ப் பலத்தை, தமிழ் நீதியை, தமிழ் அறிவை ஒன்று திரட்ட வல்ல ஒரு வெகுசன அமைப்பு வேண்டும். உடனடியாக வேண்டும்

# லெபனானில் இருந்து திருப்பி அனுப்பப்படும் சிறீலங்கா இராணுவ அணி



லெபனானில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றும் சிறீலங்கா படையினர், அடுத்தமாதம் முழுமையாக திருப்பி அனுப்பப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களுக்குப் பதிலாக இந்தோனேசிய இராணுவத்தினரை ஐ.நா பணியில் அமர்த்தவுள்ளதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

லெபனானில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றும் சிறிலங்கா படையணியின் பணிக்காலம் முடிவுக்கு வரவுள்ள நிலையிலேயே, அவர்கள் திருப்பி அனுப்பப் படவுள்ளனர். சிறிலங்கா இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதை அடுத்து, ஐ.நா அமைதிப்படைக்கு சிறீலங்கா படையினரை புதிதாக சேர்த்துக் கொள்வதில்லை என்று ஐ.நா முடிவு செய்துள்ளது. இந்த நிலையில், லெபனானுக்கு அனுப்பப்படவிருந்த சிறீலங்கா இராணுவ அணியின் பயணம் நிறுத்தப்பட்டுள்ளது.

# நீராவியடிப் பிள்ளையார் கோவில் விவகாரம் விளைவுகளை ஏற்படுத்துமாம்

**அரசில் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கண்டுபிடிப்பு**

நீராவியடி பிள்ளையார் ஆலய விவகாரத்தில் முறையான விசாரணை நடத்தப்படா விட்டால் சர்வதேச மட்டத்தில் பாரிய விளைவுகள் ஏற்படும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கை அரசை சர்வதேச அரங்கில் பாதுகாத்துவருபவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்குவின் உடல், நீதிமன்ற உத்தரவை மீறி எரிக்கப்பட்டமை குறித்து சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற தீர்ப்பினை மீறியவர்கள் முறையாக கையாளப்படுவதுடன் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பினை அமுல்படுத்துவதற்கு மாறாக குறித்த துறவியின் பூதவுடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்வதற்கு துணையாக இருந்து நீதிமன்ற தீர்ப்பினை நிறைவேற்றத் தவறிய காவல்துறையினருக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த விவகாரமானது சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டும் அமைப்புகளின் இயலாமையை எடுத்துக்காட்டுவதுடன் நீதிமன்ற தீர்ப்பினை மதிக்காத நீதிமன்ற அவமதிப்பு குற்றம் வரை சென்றுள்ளது. இந்த விடயங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும். மேலும் அண்மைக் காலங்களில் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டம் நிலை நாட்டப்படாத விதிவிலக்கு கலாசாரம் வலுப்பெற்று வருகின்றமையை நான் சுட்டிக்காட்ட வேண்டும். மனிதாபிமான மற்றும் மனித உரிமைகளுக்கெதிராக இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்களிற்கு எதிராக முறையான விசாரணைகளோ முறையான நடவடிக்கைகளோ எடுக்கப்படவில்லை. நீதிமன்றத்தினை அவமதித்தவருக்கு சனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தினை மீறிச் செயற்பட்ட ஒருவருக்கு எவ்வித முறையான விசாரணைகளும் நடத்தாமல் அத்தகைய சட்ட மீறல்களிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உயர் நிலை பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீராவியடிப் பிள்ளையார் ஆலய சம்பவம் தொடர்பாக முறையான சுயாதீனமான விசாரணைகள் இடம்பெறாத பட்சத்தில், தொடர்ந்தும் இத்தகைய விதிவிலக்கு கலாசார நிலைமை தொடர்வதனை ஊக்கப்படுத்துவதாக அமையும். அதேவேளை நாட்டுக்கும் எல்லா மக்களிற்கும் மிக பாரதூரமான விளைவுகளை உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தும். எனவே சட்ட ஒழுங்கினை நிலைநாட்ட வேண்டிய காவல்துறையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக முறையான விசாரணைகள் இடம்பெற்று நீதிமன்றத் தீர்ப்பினை மீறிய நபர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

02ம் பக்கத் தொடர்ச்சி.... யுத்தக் குற்றச்சாட்டுள்ளவரை

எந்த பகுதியிலிருந்து எழுந்தனவோ அந்த பகுதியில் நிலைகொண்டிருந்த படையணியை அடையாளம் காண்பதற்கு விரிவான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

குறிப்பிட்ட படையணியுடன் தொடர்பு பட்டவர்களை ஐக்கிய நாடுகள் படையணியில் ஈடுபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தெரிவிப்பதற்காகவே இந்த முயற்சியை முன்னெடுத்துள்ளோம்.

இலங்கை இராணுவத்தை பொறுப்புக்கூறச் செய்யவேண்டும் என கருதும் பல சிங்களவர்களும், தமிழர்களும் நேரடியாக இந்த ஆராய்ச்சிக்கு உதவியுள்ளனர் என தெரிவித்துள்ள ஜஸ்மின் சூக்கா அவர்களிற்கு நாங்கள் நன்றிக்கடன் உடையவர்களாகவுள்ளோம். ஆனால் பாதுகாப்பு காரணங்களிற்காக அவர்களின் பெயர் விபரங்களை வெளியிட முடியாது என தெரிவித்துள்ளார். இதுவரை நீதியை அனுபவித்திராத பாதிக்கப்பட்ட தமிழர்களிற்கு ஐ.நா நடவடிக்கை எடுக்கின்றது என்ற செய்தி நம்பிக்கையை அளித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஐ.நாவின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள படையினர் தமது காலம் முடியும் வரை பணியை தொடர்வார்கள் பின்னர் வேறு ஒரு நாட்டின் படையினர் அந்த இடத்தை நிரப்புவார்கள் என்பதே தற்போது வெளியாகியுள்ள தகவல்.

எனினும் ஐ.நா அமைதிப்படை கடுமையான ஆபத்தான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய சந்தர்ப்பம் உருவானால் இந்த தடை கைவிடப்படலாம் எனவும் ஐ.நா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஐ.நா மேலதிகமான தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்ப்போம் என தெரிவித்துள்ள ஜஸ்மின் சூக்கா, இந்த முக்கியமான மனித உரிமை விவகாரத்திலிருந்து தப்ப நினைத்தால் ஐ.நாவின் அமைதிகாக்கும் படையணியின் கௌரவம் பாதிக்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

5ம் பக்கத் தொடர்ச்சி.... இலங்கை நீதித்துறையின் மீது...

கிடைக்கவில்லை என்று கூறமுடியாது. காரணம், 22ஆம் திகதியே பதில் நீதிவான் கட்டளையை பிறப்பித்துள்ளார். அதேநேரம் 23ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோது அவர்களது சட்டத்தரணிகளும் இருந்துள்ளனர். ஞானசார தேரரோ அவரது தரப்பினரோ உத்தரவு கிடைக்கப்படவில்லை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**கேள்வி:- சட்டத்தரணிகளே தாக்கப்படுகின்ற நிலைமையை ஏற்பட்டிருக்கையில் அடுத்த கட்டமாக எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளீர்கள்?**

பதில்:— நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டமை, சட்டத்தரணிகள் தாக்கப்பட்டமையை கண்டித்து வடக்கு கிழக்கில் மறுதினமான 24ஆம் திகதி சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதோடு வாய்களை கறுப்புத் துணியால் கட்டி போராட்டத்தினையும் நடத்தினார்கள். ஆத்துன் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் பணிப்புறக் கணிப்பிலும் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விவகாரம் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் ஒன்றிணைந்து கலந்துரையாடிய நாம் சில தீர்மானங்களை எடுத்துள்ளோம். அதற்கமைவாக கடந்த 21ஆம் திகதி நீராவியடிப் பிள்ளையார் கோவிலருகே இடம்பெற்ற சம்பவம் மற்றும் அதன் பிற்பாடு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் மனித உரிமைகள் பேரவைக்கும் முறையிட்டுள்ளோம்.

அத்துடன் சட்டத்தரணிகள் சில விடயங்களை பெரிதாக்குகின்றனர் என தென்னிலங்கை ஊடகங்களிலே வெளியிடப்படும் செய்திகளுக்கு உரிய பதிலறிக்கை வழங்குவது என்று தீர்மானித்துள்ளோம். நீதிமன்றின் கட்டளையை அவமதித்து செயற்பட்டமை தொடர்பாக ஞானசார தேரர் மற்றும் அவர் சார்ந்த தரப்புகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்படுமென சட்ட மா அதிபர் எழுத்துமூல உறுதி வழங்கவேண்டும். சட்ட மா அதிபர் எழுத்துமூல உறுதிமொழியை வழங்காவிடின் சேவைப் புறக்கணிப்பை தொடர்வது குறித்து மீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் தீர்மானித்துள்ளோம்.

**கேள்வி:- இலங்கையின் உள்நாட்டு நீதித்துறையில் நம்பிக்கை வைக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் தமிழர்கள் இருக்கின்ற நிலையில் தற்போது நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டுள்ளமை அதனை உறுதிப்படுத்துவதாகவல்லவா இருக்கின்றது?**

பதில்:— ஆம், இலங்கை நீதித்துறையில் சட்டத்தின் முன்னாள் அனைவரும் சமன் எனக்கொள்ளப்படுகின்றது. நீதிமன்றத்தீர்ப்புக்கள் தவறாக இருந்தால் அதற்கு எதிராக மேன்முறையீடுகளைச் செய்யமுடியும்.ஆனால் வழங்கப்படும் தீர்ப்புக்களை ஏற்காது மறுக்க முடியாது. இதில் ஒரு தரப்பினர் உத்தரவை ஏற்க முடியதது என்றும் கூறமுடியாது.

நீதிமன்ற உத்தரவை அமுலாக்க வேண்டிய பொலிஸார் அதிலிருந்து தவறியிருக்கின்றார்கள். இந்த விடயத்திற்கு நீதிகட்டமைப்பில் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் நாளை நாடாளவிய ரீதியில் நீதிமன்ற உத்தரவுகள் மீறப்படுவதற்கான சாத்தியப்பாடுகளே அதிகம் ஏற்படும். அவ்வாறான நிலைமை விமர்சனங்களைக் கொண்டிருக்கும் இலங்கை நீதித்துறையின் மீதான முழுமையான நம்பிக்கையை மக்கள் இழப்பதற்கு வழியேற்படுத்தும். ஆகவே நீதிமன்ற உத்தரவை மீறிய இந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதன் மூலமே எதிர்வரும்காலத்தில் நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்த முடியும். இதனை அனைத்து தரப்பினரும் உறுதி செய்ய வேண்டும்.

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம் : 30 பேர் பலி

இந்தோனேசியாவின் சேரம் தீவை தாக்கிய 6.5 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்துக்கு பலியானோர் எண்ணிக்கை 30 ஆக



உயர்ந்துள்ளது. இந்தோனேசியாவில் கடந்த புதன்கிழமை காலை அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற் பட்டது. காலை 5.16 மணியளவில் சேரம் தீவின் கிழக்கு பகுதியில் 6.5 ரிக்டர் அளவிலான கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் பின்னர், காலை 6.46 மணியளவில் மாலுக்கு மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 6.8 ஆக பதிவானது. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்து வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் தஞ்சம் அடைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தில் 20 பேர் பலியானதாக முதல்கட்ட தகவல் வெளியானது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புபணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் பலியானோர் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளதாகவும் 150க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாகவும் பேரிடர் மீட்பு படை உயரதிகாரிகள் இன்று தெரிவித்தனர்.

# விரலை வெட்டியும் வாக்குப் போட்ட மனிதர்



ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தலில் வாக்களித்ததற்காக 2014இல் தொழிலதிபர் ஒருவரின் விரலை தலிபான்கள் வெட்டினர். இருப்பினும் தலிபான்களுக்கு பயப்படாமல் அவர் 2019 தேர்தலில் மீண்டும் வாக்களித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் பல காலமாக தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டில் ஆட்சி அதிகாரத்தை கொண்டு வர முயற்சித்து வருகின்றனர். 2001 ஆம் ஆண்டு ஆப்கானில் நுழைந்த அமெரிக்க படைகள், அப்போது நடந்த போரில் தலிபான்களை வீழ்த்தி, சனநாயக ஆட்சியை கொண்டு வந்தனர்.

போரில் தோல்வி அடைந்ததற்கு பழிவாங்கும் விதமாக, அவ்வப்போது தாக்குதல்கள் நடத்தி அரசுக்கு இடையூறு ஏற்படுத்தி வந்தனர். 2014 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலின் போது மக்கள் யாரும் வாக்களிக்கக் கூடாது என தலிபான்கள் எச்சரித்திருந்தனர். மிரட்டலையும் மீறி வாக்களித்த 6 பேரின் விரல்களை வெட்டினர். அவ்வாறு விரலை இழந்த ஒருவர் தான் சபியுல்லா சபி. இவர் 2014 அதிபர் தேர்தலில் வாக்களித்து விட்டு, காபூரில் இருந்து தனது வீட்டிற்கு காரில் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது கோஸ்ட் பகுதியில் அவரை வழிமறித்த தலிபான்கள், கையில் வாக்களித்ததற்கான அடையாள மை இருந்ததால் வலது கை ஆள்காட்டி விரலை வெட்டினர். இந்த ஆண்டு அதிபர் தேர்தல் செப்.28 இல் நடந்தது. இதில் சபி வாக்களித்தார். இது பற்றி சபி கூறுகையில், அது மிக வலியான அனுபவம். ஆனால் போனது வெறும் விரல் தான். எனது குழந்தைகள் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் வைத்து தான் தற்போது எதிர்ப்பை மீறி வாக்களித்தேன். அவர்கள் என் கையையே வெட்டி இருந்தாலும் நான் அமைதியாக இருந்திருக்க மாட்டேன்.

இம்முறை வாக்களிக்க வேண்டாம் என எனது குடும்பத்தினர் கூறினர். ஆனால் அவர்களை அழைத்துச் சென்று, அனைவரும் குடும்பத்துடன் வாக்களித்தேன். சனநாயகத்தை ஆதரித்தே வாக்களித்தேன் என்றார். மேலும் தலிபான்கள் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர அனைவரும் வாக்களிக்க வேண்டும் என சமூக வலை தளங்களில் சபி கோரிக்கை வைத்துள்ளார்.

# 2 கருப்பைகள் கொண்ட இளம்பெண் 4 குழந்தைகளுக்குத் தாய் ஆனார்

அவுஸ்ரேலியாவில், இரட்டை கருப்பைகள் அமைந்த பெண் 4 குழந்தைகளுக்கு தாயாகி உள்ள வியக்கவைக்கும் தகவல் கிடைத்துள்ளது.

அவுஸ்ரேலிய நாட்டை சேர்ந்தவர் லாரன் காட்டர் (வயது 34). ஆரம்ப பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியையாக இருக்கிறார். இவருக்கு 16 வயதானபோது உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டது. மாதவிலக்கு பிரச்சினையால் அவர் அவதியுற்றார். பி.சி.ஓ.டி என்றழைக்கப்படுகிற சினைப்பை நீர்க்கட்டிகள் பிரச்சினையும் இருந்துள்ளது.

ஆனால் அவர் ஒரு மருத்துவ நிபுணரை சந்தித்து, 'அல்டிரா சவுண்ட் ஸ்கேன்' பரிசோதனை செய்து பார்த்ததில், அவருக்கு 'யூட்ரஸ் டிடெல்பிஸ்' என்ற பிரச்சினை இருப்பதாக கண்டறியப் பட்டது.



இந்த பிரச்சினை உடைய பெண்கள் மிக அபூர்வம். இவர்களுக்கு கருப்பை, கருப்பை வாய், பெண் உறுப்பு என இனப்பெருக்க உறுப்புகள் இரட்டையாக இருக்கும். அவர் திருமணமானாலும் குழந்தை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு குறைவு என்று டாக்டர்கள் கூறினர். இருப்பினும் திருமணமாகி இயல்பான தாம்பத்திய வாழ்க்கை நடத்துவதற்கு வசதியாக அவர் ஒரு அறுவை சிகிச்சை செய்து கொண்டார். ஆனாலும்கூட, இரட்டை கருப்பை பிரச்சினையால், கருச்சிதைவு நிகழவோ அல்லது குழந்தை இறந்து பிறக்கவோ வாய்ப்பு உண்டு என டாக்டர்கள் கூறினர். இதையடுத்து 2013ம் ஆண்டு ஒக்டோபரில் லாரன் கருத்தரித்தார். அவரது வலது புற கருப்பையில் கருத்தரித்தது தெரிய வந்தது. 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் அறுவை சிகிச்சை மூலம் அமேலீ என்ற அழகான பெண் குழந்தையை அவர் பெற்றெடுத்தார். பிறகு ஓராண்டு கழிந்த நிலையில் லாரன், பென் தம்பதியர் இரண்டாவதாக ஒரு குழந்தை பெற்றெடுக்க விரும்பினர்.

இம்முறை லாரன் இடது புற கருப்பையில் கருத்தரித்தது. அறுவை சிகிச்சை மூலம் அவர் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தார். இந்த ஆண் குழந்தைக்கு பெயர் ஹார்வி. இதையடுத்து கருத்தடை சாதனம் பொருத்திய நிலையிலும், 3 வாரங்களில் லாரன் மீண்டும் அதிசயமாக கருத்தரித்தார். ஒரே கருப்பையில் இரட்டை கரு இருந்தது தெரிய வந்தது.

அவரை தொடர் ஓய்வில் இருக்குமாறு டாக்டர்கள் அறிவுறுத்தினர். அவரும் அதை கடைப்பிடித்து வந்தார். கடந்த ஆண்டு ஜூன் மாதம் லாரன், மாயா மற்றும் ஈவீ என இரட்டை பெண் குழந்தைகளை பெற்றெடுத்தார். இப்போது இந்த இரட்டை குழந்தைகளுக்கு வயது 15 மாதம். இப்போது லாரன், பென் தம்பதியர் அமேலீ, ஹார்வி, மாயா, ஈவீ என 4 குழந்தைகளுடன் இனிமையான குடும்ப வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

# பேராசிரியையின் நெகிழ்ச்சியான செயல்



கல்லூரி மாணவி ஒருவரின் குழந்தையை 3 மணி நேரமாக முதுகில் சுமந்துகொண்டு பாடம் எடுத்த பேராசிரியைக்கு பாராட்டு குவிந்து வருகிறது. அமெரிக்காவில் உள்ள சார்ஜியா க்வினெட் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வருபவர் ரமடா சிசோகோ. இவர் வழக்கம் போல் தனது மாணவர்களுக்கு பாடம் எடுத்து வந்துள்ளார்.

அப்போது அவரிடம் படிக்கும் இளம் பெண் ஒருவர் தன்னிடம் கைக்குழந்தை இருப்பதாலும், அதனைக் கவனிக்க ஆள் இல்லை என்றும் அதனால் வகுப்புக்கு வருவது கடினம் என்றும் தெரிவித்துள்ளார். இதனை உணர்ந்த பேராசிரியை குழந்தையை வாங்கி தன்முதுகில் கட்டிக்கொண்டு பாடம் எடுத்துள்ளர்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள ரமடாவின் மகள், என் அம்மாதான் என் முன்னுதாரணம். அவரது மாணவியின் குழந்தையை தன் முதுகில் 3 மணி நேரமாக தாங்கிக்கொண்டு பாடம் எடுத்துள்ளார். இந்த உலகத்தையே தன் மகளைப்போல் பாவிக்கும் அம்மாவை நான் பெற்றிருப்பது என் அதிர்ஷ்டம்" என குறிப்பிட்டுள்ளார்.

# எறும்புகள் கற்றுத்தரும் பாடம்

பூமியில் சுமார் பத்தாயிரம் ரில்லியன் எண்ணிக்கையில் எறும்புகள் உள்ளன. உலகின் எல்லாப் பகுதிகளிலும் எறும்புகள் காணப்பட்டாலும் பெரும்பாலானவை வெப்பப் பிரதேசங்களில் வாழ்கின்றன. 2009ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, எறும்புகளில் கிட்டத்தட்ட 22 ஆயிரம் இனங்கள் உள்ளன. தாவர இனங்கள் பூமியில் தோன்றிப் பரவிய பின்னரே (சுமார் 100 முதல் 140 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்) எறும்புகள் பல்வேறு இனங்களாக வளர்ச்சி பெற்றன.

எறும்புகள் தங்கள் பண்ணையை 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே அமைக்க ஆரம்பித்துவிட்டன. இதற்காக ஒரு கூட்டத்தைத் தக்கவைத்துக் கொள்கின்றன. இந்த கூட்டத்திற்கு 'ஆஃபிட்ஸ்' (Aphids) என்று பெயர். இந்தக் கூட்டத்தை இனிப்பு தாவரங்களுக்கு இடையே கொண்டு சென்று பிற உயிரினங்களுக்கு இரையாகாமல் பாதுகாக்கின்றன. ஒரு பரிவர்த்தனையாக அந்த ஆஃபிட்ஸ்களிலிருந்து சத்தான தேன் துளிகளை உறிஞ்சிவிடுகின்றன. இந்தத் தேன், எறும்புகளுக்கு உணவாகவும், மருத்துவப் பொருளாகவும் பயன்படுகிறது.

மனிதர்கள் மற்றும் தேனீக்களைப் போலவே எறும்புகளுக்கு மொழியியல் இடப்பெயர்ச்சி உண்டு. இதன் மூலம் அவை ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டு, தொலைதூரப் பொருள் மற்றும் நிகழ்வுகளை பரிமாறிக்கொள்ள இயலும். எறும்புகள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ள 'பெரமோன்ஸ்' (Pheremones) என்ற ரசாயனம் பயன்படுகிறது. இந்த இரசாயனத்தின் மூலம் தன் சக எறும்புகளுடன் சிறுசிறு செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன.

எறும்புகளுக்கு அற்புதமான சிறப்பு சக்தியும் உண்டு. மிக உயரத்தில் இருந்து பூமியில் விழுந்தாலும் எறும்புகள் படுகாயம் என்று அடைவதேயில்லை. இதற்கு காரணம் அதன் உடல் எடை மிகக்குறைவாக இருப்பதுதான். எறும்புகள் தங்கள் உடம்பை நீரில் மூழ்காமல் இருக்கப் பல்வகை உடல் அமைப்புகளை மாற்றிக் கொள்ள இயலும். 'நெருப்பு எறும்புகள்' (Fire Ants) என்னும் ஒருவகை எறும்புகள் ஒரு குழுவாக இருக்கும்போது ஒரு நீர் நிலையைக் கண்டால் அவை ஒன்றோடொன்று பிணைந்து காற்றுப்புகா வண்ணம் ஒரு அமைப்பை உருவாக்குகின்றன. இவை ஒரு எறும்புப் படகாக மாறி எந்த ஒரு தீவிரமான மழை, புயல் மற்றும் பயங்கர வெள்ளத்தில் இருந்து தப்பித்துக்கொள்கின்றன. அந்த எறும்புப் படகின் கீழ் பல நூறு எறும்புகள் கொண்ட ஒரு அடுக்கு சுற்றிச்சுற்றி மற்ற எறும்புகளுக்கு ஒரு அடிவாரமாக பணியாற்றும். எறும்புகளின் உடல் வெளிப்புற அமைப்பு கொஞ்சம் நீர் எதிர்ப்பு சக்தியை இயற்கையாகவே கொண்டுள்ளது. ஏனைய பூச்சிகளை போலவே எறும்புகள் உடலுக்கு வெளியே எலும்புக்கூட்டையும், மூன்று சோடி கால்களையும், துண்டுகளால் ஆன உடலையும், தலைப்பகுதியில் இரு கூட்டு கண்களையும் இரு உணர் உறுப்புக் களையும் கொண்டிருக்கின்றன.



தன்னைச் சுற்றியிருக்கும் காற்றுக் குமிழிகளை எறும்புகளால் சமம் செய்ய இயலும். இதை ஒரு குழுவாக நீர் எதிர்ப்பு சாதனமாக அவைகளால் பயன்படுத்த முடியும். 'பொற்றாடை' என்னும் எறும்புகள் இரு கொடுக்குகள் கொண்டவை.

இவை எதிரிகளுக்கு இரையாகாமல் இருக்க, குதித்து தப்பிக்கும் கலையைப் பெற்றுள்ளன. இந்த குதிக்கும் கலைத்திறமை அவைகளின் சக்தி வாய்ந்த தாடைகளால் நிகழ்த்தப்படுகின்றது. 180 பாகையில் திறக்கப்பட்ட தாடையை வேகமாக மூடும் நிகழ்வு மணிக்கு சுமார் 225 கிலோ மீட்டர் வேகத்தில் நிகழ்கிறது. இதனால் சக்தி வாய்ந்த வலிமையுடன் எறும்புகள் காற்றில் தூக்கி எறியப்பட சாத்தியமாகிறது.

அந்த எறும்புகள் தப்பிக்க நிகழ்த்தும் இந்த குதிப்பு முயற்சி 'பவுன்சர் டிபன்ஸ் ஜம்ப்' (Bouncer Defence Jump) என்று அழைக்கப்படுகிறது. கிரிக்கெட்டில் வீசப்படும் பவுன்சர் (bouncer) பந்து தரையில் பட்டு எப்படி துள்ளி எழுகிறதோ அதுபோல ஆபத்தான இடத்தில் இருந்து எறும்புகள் துள்ளிக் குதித்து தப்பிக்கும்.

இந்த குதித்தல் நாம் கண் சிமிட்டும் நேரத்தை விட 2300 மடங்கு வேகத்துடன் நிகழ்கிறது. எறும்புகளின் சுறு சுறுப்புத் தன்மை என்றுமே நம்மை ஈர்த்து அதன்பால் ஆய்வுகளை மேற்கொள்ள உதவி வருகிறது. நாமறிந்த எறும்புகளில் 'சுள்ளெறும்பு' என்பது அசைவ உண்ணிகள், 'சாமி எறும்பு' என்பவை சைவ உண்ணிகள். உலக அளவில் எறும்பைப் பற்றி குறிப்பாக ஒவ்வொரு வகை எறும்புகளைப் பற்றியும் பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

# மரணத்தை தள்ளிப் போடலாம்!



“இனி மரணம் எப்போது வரும் என்பதை கண்டுபிடித்துச் சொல்ல முடியும்...” என்று அதிர்ச்சியளிக்கிறது அண்மைய ஆய்வு ஒன்று. அதாவது ஒருவர் இன்னும் எவ்வளவு நாட்கள் இருக்கப்போகிறார் என்பதை துல்லியமாகச் சொல்ல முடியாவிட்டாலும் தோராயமாக கணிப்பதற்கான இரத்தப் பரிசோதனை முறை வரப்போகிறது. அதன்படி ஒருவரின் இரத்தத்தை ஆய்வு செய்து இன்னும் பத்து ஆண்டுகள் தான் அவர் உயிரோடிருப்பார் என்று அந்த ஆய்வில் சொல்ல முடியும்.

ஜோரிஸ் டீலன் மற்றும் எலைன் என்ற இரு மருத்துவர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டு கட்டுரையைச் சமர்ப்பித்திருக்கின்றனர். இதற்காக 18 முதல் 109 வயது வரையிலான 33 ஆயிரம் பேரை ஆய்வு செய்திருக்கின்றனர். ஆய்வுக்குட்பட்டவர்கள் எல்லோருமே நல்ல உடல் ஆரோக்கியத்தில் இருந்தவர்கள்.

அவர்களின் 16 வருட கால உடல் நல விவரங்களை ஆய்வு செய்து அவர்கள் எப்போது மரணிக்கப்போகிறார்கள் என்று கண்டுபிடித்திருக்கின்றனர். இந்தப் பரிசோதனை மட்டும் நடைமுறைக்கு வந்தால் மருத்துவமனையில் மக்கள் கூட்டம் திரளும்.

# காற்றிலிருந்து உணவு

பின்லாந்தை சேர்ந்த, 'சோலார் புட்ஸ்', காற்றை மாசுபடுத்தும் கரியமில வாயுவை சூரிய மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றைக் கொண்டு, 'சோலெய்ன்' என்ற புதுமையான புரத மாவை உற்பத்தி செய்யத் துவங்கியுள்ளது.

அமெரிக்க விண்வெளி அமைப்பான 'நாசா'வின் தொழில்நுட்பத்தை பின்பற்றி இந்த சாதனையை செய்திருக்கிறது சோலார் புட்ஸ். வழக்கமான தானிய மாவுகளில் இருக்கும் அதே சுவையும், புரதம், காபோ பைதரேட் மற்றும் சிறிது கொழுப்பு ஆகியவை சோலார் புட்ஸ், காற்று மாசிலிருந்து தயாரிக்கும் சோலெய்ன் புரதத்திலும் இருக்கிறது. ஒரு கிலோ சோலெய்ன் தயாரிக்க எரிபொருள் செலவு குறைவு.

ஒரு கிலோ சோயாவை உற்பத்தி செய்ய 2,500 லீட்டர் தண்ணீர் தேவை. ஆனால், சோலெய்னுக்கு வெறும், 10 லீட்டர் தண்ணீரே போதும். பருவநிலை மாற்றத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், சோலெய்ன் புரத மாவை விற்பனை செய்ய இந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது.